பக்கங்கள் : 14+கல்விச்சுடர்

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 20 திங்கட்கிழமை (03.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily

## மாணவர், பெண்கள் உட்பட ஏழு பேர் பருத்தித்துறையில் நேற்றுக் கைது!

### அவர்களில் ஐவர் ஒரே குடும்பத்தினர்

கரவெட்டி,ஏப்.3

வடமராட்சியில் நேற்றுப் படையினர் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தினர். இதன்போது பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத்தெரு பகுதி வீடொன்றில் வசித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரையும் அந்த வீட்டில் தங்கியிருந்த இரு இளைஞர்களையும் படையினர் கைது செய்தனர்.

நேற்று அதிகாலை 5 மணியளவில் பவள் கவசவாகனங்கள், மோட்டார் சைக்கிள் படைப்பிரிவு ஆகியவற்றின் துணையுடன் இராணுவத்தினரும் பொலீஸாரும் உயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய பருத்தித்துறை முதலாம், இரண்டாம், மூன்றாம் குறுக்குத்தெருக்கள் உள்ள பிரதேசத்தைச் சுற்றிவளைத்து வீடு வீடாகச் சோதனை நடத்தினர். சோதனை நடவடிக்கை முற்பகல் 10 மணிவரை இடம்பெற்றது.

இத்தேடுதலின்போது இரண்டாம் குறுக்குத்தெருவில் உள்ள வீடொன்றிலிருந்த ஏழு பேரை கைது

(14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மாணவரை உளவியல் ரீதியாக பாதிக்கும் படை நடவடிக்கைகள்

### மாணவர் ஒன்றியம் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஏப்.3

படையினரின் நடவடிக்கை தமிழ் மாணவர்களை உளவியல் ரீதியாகப் பாதிப்புக்குள்ளாக்குகிறது.

இவ்வாறு கண்டனம் தெரிவித்துள்ளது வடமராட்சி தமிழ் மாணவர் ஒன்றியம்.

பருத்தித்துறையில் நேற்று படையினர் நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதல் மற்றும் கைதுகள் ஆகியவற்றைக் கண்டித்து வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நேற்று அதிகாலை பருத்தித்துறையில் சுற்றிவளைத்த சிறிலங்கா படைகள் அங்கு ஒரு வீட்டில் தங்கி

(14ஆம் பக்கம் பார்க்க)

# உடனடியாகப் பொதுத் தேர்தல்?

# அரசுத் தலைமை ஆராய்கின்றது!

## பாக். விஜயத்தின் போது ஜனாதிபதி தம் சகாக்களுடன் மந்திராலோசனை

கொழும்பு,ஏப்ரல்3

**நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பெருவெற்றியீட்டியிருக்கும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவரும், ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ, இந்தத் தேர்தல் வெற்றிச் சூடு ஆறமுன்னரே பொதுத் தேர்தலொன்றை நடத்தி நாடாளுமன்றத்தில் தமது அரசின் பலத்தை ஸ்திரப்படுத்திக்கொள்வது குறித்து ஆராய்ந்து வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

**தேர்தல் முடிந்த கையோடு பாகிஸ்தானுக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நாடாளுமன்றக் கலைப்பு தொடர்பில் அங்கு தம்முடன் வந்திருக்கும் அமைச்சரவை உறுப்பினர்களுடனும் ஏனைய முக்கியஸ்தர்களுடனும் மந்திராலோசனை நடத்தியிருக்கிறார் எனவும் கூறப்படுகிறது.**

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆளும் தரப்பு வெற்றிபெற்று கூடுதலான உள்ளூராட்சி மன்றங்களைத் தனித்துக் கைப்பற்றியுள்ள நிலையில் நாடாளுமன்றத்திலும் வேறு கட்சிகளின் தயவை நம்பி இராமல் தமது அணியைப் பலமான நிலையில் வைத்திருக்க ஜனாதிபதி விரும்புகிறார் எனத் தெரிகிறது.

அமைதி முயற்சிகளை வலுவாக முன்னெடுக்க வேண்டுமானால் ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் ஆதரவில் தங்கி இராது பலம்மிக்க நாடாளுமன்ற அதிகாரத்தைத் தமது அரசு பெறவேண்டுமென்பதால், நாடாளுமன்றக் கலைப்பு

(14ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச்சுடரில்

இன்று: வணிகக் கல்வி வினாத்தாள்.

நாளை: புவியியல் வினாத்தாள்.

## போவர் இன்று வருகை

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான விசேட தூதுவராக நோர்வே அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஜோன் ஹன்ஸன் போவர் இன்று கொழும்பு வரவுள்ளார்.

எதிர்வரும் புதன்கிழமை கிளிநொச்சிக்கு செல்லவுள்ள போவர், விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## தபால் ஊழியர் இன்று பகிஷ்கரிப்பு

2006ஆம் ஆண்டின் முதலாம் இலக்க சம்பள உயர்வு சுற்றறிக்கையை நிராகரிக்கக் கோரி இன்று அதிகாலை முதல் நள்ளிரவு 12 மணிவரை சுகவீன லீவுப் போராட்டமொன்றை தபால் சேவையைச் சேர்ந்த 12 தொழிற்சங்கங்கள் மேற்கொள்கின்றன.

இச்சுகவீன லீவுப் போராட்டத்தில் ஏனைய

(14ஆம் பக்கம் பார்க்க)



பாகிஸ்தானுக்கான விஜயமொன்றை மேற்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் ராவோ சிக்கந்தன் இக்பாலை சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

### பாக்., சீனாவுடன் இலங்கைக்கு நெருக்கம்:

## முறுகும் இந்தியாவைச் சமாளிக்க அரச உயர் குழு விரைவில் செல்லும்

கொழும்பு,ஏப்.3

பாகிஸ்தான் மற்றும் சீன அரசுகளுடன் இலங்கை கொண்டிருக்கும் புதிய தொடர்பாடல்கள், நெருக்கம் ஆகியன குறித்து இராஜதந்திர ரீதியில் விளக்கமொன்றை இந்தியாவிற்கு வழங்குவதற்காக இலங்கை அரசின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று எதிர்வரும் 6ஆம் திகதி இந்தியா செல்லவுள்ளது.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எச்.எஸ்.பலிஹக்கார, பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ, சமாதான செயலகத்தைச் சேர்ந்த ஜோன் குணரட்ண ஆகியோர் இவ்வாறு செல்லவுள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று பாகிஸ்தானுக்கான விஜயமொன்றை மேற்கொண்டது. இதன்போது பாதுகாப்பு தொடர்பான ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதேபோல் ஆயுதக் கொள்வனவிற்காக சீனா சென்றிருந்த பாதுகாப்புச் செயலாளர் அங்கும் சில ஒப்பந்தங்களைச் செய்திருந்தார்.

இராணுவ மற்றும் பொருளாதார ரீதியில் பாகிஸ்தான் மற்றும் சீனாவுடன் இலங்கையின் புதிய அரச நிர்வாகம் ஏற்படுத்திவரும் அதீத நெருக்கம், தொடர்புகள் என்பன இந்தியாவை அதிருப்திக்குள்ளாக்கியிருப்பதாக அவதானிகள் கூறுகின்றனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவின் முக்கிய பொறுப்புகளிலிருந்து மஹிந்த விஜயசேகர எம்.பி திடீர் நீக்கம்!

### இந்தியா புறப்படமுன் ரணில் அதிரடி நடவடிக்கை

கொழும்பு,ஏப்.3

ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மஹிந்த விஜயசேகர கட்சியின் மாத்தறை அமைப்பாளர் பதவியிலிருந்தும், கட்சியின் செயற்குழுவிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவினால் உடனடியாக அமுலாகும் வகையில் பிறப்பிக்கப்பட்டுள்ள இந்த உத்தரவுக்கான கடிதம் நேற்று ஐ.தே.க. தலைவரின் அலுவலகத்திலிருந்து மஹிந்த விஜயசேகர எம்.பிக்கு அவசர அவசரமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைச் சிங்கள மீனவர்கள் 9 பேர் தமிழகக் கடலில் கைது

சென்னை,ஏப்.3

தமிழகக் கடல் எல்லையில் அத்துமீறி நுழைந்தனர் எனக் கருதப்படும் இலங்கையின் சிங்கள மீனவர்கள் ஒன்பது பேர் சென்னைத் துறைமுகக் கடலோரப் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு சென்னை துறைமுகக் கடலோரப் பாதுகாப்புப் படையினர் 'சாரங்' என்ற கப்பலில் நாகபட்டினத்திலிருந்து இருநூறு கிலோமீற்றர் தொலைவில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது இந்திய எல்லைக்குள் 'அலெக்சிதா', 'சீலான்' என்ற இரு படகுகள் அத்துமீறி நுழைந்ததை அவர்கள் கண்டனர் எனக்

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



யாழ்.சைவ பரிபாலன சபையினரால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நீராவியடி நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. சபையின் பரீட்சைச் செயலாளர் கலாநிதி வ.கந்தசாமி, பிரதம விருந்தினரான யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராசா ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதலிரு படங்களிலும் சமயபாடப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

*(படங்கள்:ஒளிஅதிரன்)* (22)

### தாதியர், ஊழியர் தாக்கப்பட்டதன் எதிரொலி

# சங்கானை வைத்தியசாலைப் பணிகள் கடந்த ஐந்து நாள்களாக ஸ்தம்பிதம்

வலி.தென்மேற்கு,ஏப்.3

சங்கானை வைத்தியசாலையின் டாக்டர்கள், ஊழியர்கள் நடத்திவரும் பணிப்புறக்கணிப்பை அடுத்து கடந்த ஐந்து நாள்களாக வைத்திசாலையின் சகல செயற்பாடுகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

அலரி விதை உட்கொண்ட நிலையில் சங்கானை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட யுவதி ஒருவர், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார். இந்தச் சம்பவத்தை அடுத்து கடந்த புதன் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் சங்கானை வைத்தியசாலைக்குள் நுழைந்த குழு ஒன்று அங்கு பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்களையும் தாதியர்களையும் தாக்கியதுடன் வைத்தியசாலைச் சொத்துக்களையும் நாசமாக்கியதென்று கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து மேற்படி வைத்தியசாலையின் ஊழியர்கள், தாதியர்கள், டாக்டர்கள் கடந்த வியாழக்கிழமை முதல் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதனால், வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு, விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் பகுதி என்பன கடந்த ஐந்து நாள்களாக இயங்கவில்லை.

இந்த நிலையில் -

வைத்தியசாலையின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது.

வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கத் தலைவர் பொன்.சாம்பசிவம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி பி.சுபாசன் -

எமது வைத்தியசாலை வளாகத்துள் நுழையும் வெளிநபர்கள் அடிக்கடி பிரச்சினை தருவதுடன் தாக்குதல் நடத்துவதும் அதிகரித்துள்ளது.

கடந்த 28ஆம் திகதியன்று இடம்பெற்ற சம்பவம் மிகவும் பாரதூரமானது. வைத்தியசாலை ஊழியர்களும் அலுவலர்களும் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர். அத்துடன் ஜன்னல் கண்ணாடிகளும் தளபாடங்களும் ஒரு கும்பலால் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன.

எமது வைத்தியசாலையில் அண்மைக் காலங்களில் ஐந்து தடவைகள் வெளிநபர்களால் பிரச்சினைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனால் எமது ஊழியர்கள் தங்கள் கடமைகளை சரிவரச் செய்யமுடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் பாதுகாப்பு எதுவுமின்றி வேலை செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

கடந்த 28ஆம் திகதி தாக்குதல் நடத்தியவர்கள் இங்கு அழைத்து வரப்பட்டு முன்னிலைப்படுத்தப்படவேண்டும். அவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை உடன் எடுக்கப்படவேண்டும்.

அத்துடன் பாதுகாப்பு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு எமக்கு பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். இது பற்றி யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளருக்கும் அறிவித்துள்ளோம் - என்றார்.(எ-135)(22)

## தவறவிடப்பட்ட பொருள்கள் கண்டெடுப்பு

சாவகச்சேரி,ஏப்.3

கைதடிப் பிள்ளையார் ஆலயப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட சில பொருள்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இப்பொருள்களைத் தவறவிட்டவர்கள் கைதடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினருடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-31)(22)

## கொடிகாமம் நகரப் பகுதியில் மோ. சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

சாவகச்சேரி,ஏப்.3

கொடிகாமம் நகரப் பகுதியில் மோட்டார் சைக்கிள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று கூறப்படுகிறது.

கடந்த சுமார் ஒருமாத காலத்தில் மூன்று மோட்டார் சைக்கிள்கள் இப்பகுதியில் திருடப்பட்டுள்ளன.

கடந்த மாதம் கொடிகாமம் நகரப் பகுதியில் யமஹா மோட்டார் சைக்கிளும் கடந்த வாரம் கொடிகாமம் சந்தையில் மீன் வியாபாரியொருவரின் மோட்டார் சைக்கிளும் கடந்த வெள்ளிக்கிழமை கொடிகாமம் சந்தையில் பொருள்களை வாங்கச் சென்ற ஒருவரின் சைக்கிளும் திருடப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை நகரப் பகுதியில் இளைஞன் ஒருவரின் நடமாட்டத்தில் சந்தேகம் கொண்ட பொதுமக்கள் அந்த இளைஞரை விசாரிக்க முற்பட்டனர். அந்த இளைஞர் அவர்களிடமிருந்து தப்பி சந்தைப் பகுதிலுள்ள மதில்களைப் பாய்ந்து தப்பிச்சென்றார்.

இந்தச் சம்பவம் இடம்பெற்றபோதே மீன் வியாபாரியின் மோட்டார் சைக்கிள் திருடப்பட்டது.

இது தொடர்பாக கொடிகாமம் பொலீஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். கொடிகாமம் நகரில் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களை நிறுத்துவோர் பாதுகாப்பாக நிறுத்திவைக்குமாறு அறிவுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை -

கொடிகாமம் நகரில் சந்தேகத்துக்கிடமாக நடமாடுபவர்களை அவதானிக்கவும் விழிப்புக்குழுக்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

(ஒ-31)(22)

## ஆசிரியை தாக்கி மாணவி காயம்!

ஆசிரியை தாக்கியதால் காயமடைந்தவர் என்று கூறப்படும் மாணவி ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

வலிகாமம் வலயப் பாடசாலை ஒன்றில் ஆண்டு இரண்டில் கற்கும் 7 வயது மாணவி ஒருவரே கண்பகுதி வீக்கமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டவராவார்.

கடந்த வெள்ளிக்கிழமை இம்மாணவி பாடசாலையில் இடம்பெற்ற தவணைப் பரீட்சையில் தோற்றினார் என்றும் - அப்போது இடம்பெற்ற சம்பவத்தில் ஆசிரியை தாக்கி இம்மாணவி காயமடைந்தார் என்றும் - மாணவி தரப்பில் கூறப்படுகிறது.

(ஒ-86)(22)

## மீளக்குடியமர முடியாதவர்களுக்கு தங்கியுள்ள இடத்தில் நிவாரணம்

### தென்மராட்சிப் பிரதேச செயலர் ஏற்பாடு

தென்மராட்சி,ஏப்.3

இடம்பெயர்ந்த பின்னர் சொந்த இருப்பிடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையில் ஏனைய பிரதேசங்களில் தங்கியுள்ள தென்மராட்சிப் பிரதேச மக்களில் இடம்பெயர்ந்தோர் நிவாரணம் மற்றும் சமுர்த்தி நிவாரணம் பெறுவோர் தமது நிவாரணங்களை தாம் தங்கியுள்ள பகுதிகளில் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தற்போது தாம் தங்கியுள்ள பிரிவுக் கிராம அலுவலருடன் தொடர்புகொண்டு பதிவினை மேற்கொண்டு அப்பகுதியிலேயே நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

ஏனைய பிரதேசங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் வழங்கப்படும் நிவாரண முத்திரைகள் ஏப்ரல் மாதத்துடன் நிறுத்தப்படுமெனவும் அவர் அறிவித்துள்ளார்.

(ஒ-117)

## இந்தியா-இங்கிலாந்து இடையே 3 ஆவது ஒருநாள் ஆட்டம் இன்று

கோவா,ஏப்.3

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான மூன்றாவது ஒருநாள் ஆட்டம் இன்று கோவாவில் நடைபெறவுள்ளது. இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி தற்போது ஒருநாள் தொடரில் விளையாடிவருகின்றது. முதல் இரு ஆட்டங்களிலும் இந்திய அணி வெற்றி பெற்று ஒரு நாள் தொடரில் 2:0 என்ற வகையில் முன்னிலை வகிக்கின்றது.

இந்த மூன்றாவது ஒருநாள் ஆட்டத்திற்காக நேரு மைதான ஆடுகளம் புதிதாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு மாதங்களாக அதற்கான பணிகள் நடைபெற்றுவந்தன.

இந்திய அணி கோவா மைதானத்தில் விளையாடிய அனைத்துப் போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ளது. இலங்கையணியுடன் இருமுறையும், ஆஸ்திரேலிய அணியுடன் ஒரு முறையும் தோல்வியைத் தழுவியுள்ளது. இரு அணி வீரர்களும் 3 ஆவது ஆட்டத்திற்காகத் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். (க)

### தென் ஆபிரிக்கா - ஆஸ்திரேலியா டெஸ்ட் போட்டி

ஜொகன்னஸ்பேர்க்கில் நடைபெற்று வரும் மூன்றாவது டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்கா 303 ஓட்டங்களையும் ஆஸ்திரேலியா 270 ஓட்டங்களையும் பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தன.

தென்னாபிரிக்க வேகப் பந்து வீச்சாளர் நிற்னி சிறப்பாக பந்து வீசி ஆஸ்திரேலிய அணியின் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். தென்னாபிரிக்கா சார்பாக அஸ்வெல் பிறின்ஸ் 93 ஓட்டங்களையும் ஆஸ்திரேலிய அணி சார்பாக மைக்கல் ஹசே 73 ஓட்டங்களையும் பெற்றனர். (க)

## 'குமுதம்' பதிப்பாளர் காலமானார்



சென்னை,ஏப்.3

தமிழகத்திலிருந்து வெளியாகும் 'குமுதம்' வார இதழின் பதிப்பாளர் பி.வி.பார்த்தசாரதி (வயது 83) நேற்று அதிகாலை 3.15 மணியளவில் சென்னை மைலாப்பூரில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார்.

04.05.1925 அன்று பிறந்த பி.வி.பார்த்தசாரதி சட்டத்துறையில் பட்டம்பெற்றவராவர். பிரபல பத்திரிகையாளர் எஸ்.ஏ.பி. அண்ணாமலையுடன் இணைந்து 1947 ஆம் ஆண்டு 'குமுதம்' இதழை இவர் ஆரம்பித்தார்.

இவருக்கு மனைவியும் இரு மகன்களும் ஒரு மகளும் உள்ளனர். மகன்களில் ஒருவரான பி.வரதராஜன் தற்போது 'குமுதம்' இதழின் நிர்வாக இயக்குநராக உள்ளார். மறைந்த பி.வி.பார்த்தசாரதியின் இறுதிக்கிரியைகள் நாளை இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)(22)

## இலங்கை-பாகிஸ்தான் அணிகளிடையே கண்டியில் இன்று இரண்டாவது டெஸ்ட்

கொழும்பு,ஏப்.3

இலங்கை - பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளிற்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் இன்று கண்டி அஸ்கிரிய மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் அணி முதலில் பங்கு பற்றிய ஒருநாள் தொடரை 2:0 என்ற ரீதியில் கைப்பற்றியது. அதன் பின்பு நடைபெற்ற முதலாவது டெஸ்டில் திறமையாகப் போராடி சமனிலை அடையச் செய்தது. இந்நிலையில் இவ்விரு அணிகளிற்குமிடையிலான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் இன்று ஆரம்பமாகவுள்ளது. இதற்காக இரு அணி வீரர்களும் தீவிர வலைப்பயிற்சியில் நேற்று ஈடுபட்டனர்.

கண்டி மைதானம் முரளியின் சொந்த மைதானம் என்பதால் அவர் விக்கெட்டுகளை அள்ளுவார் என எதிர்பார்க்கலாம். இந்த டெஸ்டில் வெற்றி பெறுவதன் மூலம் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வுபெறும் ஜயசூரியவிற்கு நல்லதொரு பிரியாவிடை அளிக்கலாம். எனவே இந்த டெஸ்டில் வெல்ல இலங்கையணி முனைப்பாக இருக்கும் என்று கருதப்படுகிறது. (க)



உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# கண்காணிப்புக் குழுத் தலைவர் விடைபெற முன் கூறிய உண்மை

இலங்கையின் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவராக இருந்து மூன்று தினங்களுக்கு முன்னர் அப்பொறுப்பிலிருந்து விலகிக்கொண்ட ஹக்ரூப் ஹொக்லண்ட் தமது பொறுப்புகளைக் கையளிக்கும் சமயத்தில் வெளியிட்ட சில கருத்துகள் தென்னிலங்கையில் பலத்த சர்ச்சைகளை - வாதப்பிரதிவாதங்களை - தோற்றுவித்திருக்கின்றன.

அவர் நோர்வேயின் இராணுவத்தில் முப்பத்தியைந்து வருடங்கள் பணியாற்றியவர். பொஸ்னியா, ஈராக், லெபனான் உட்பட பிணக்குகளில் சிக்கிய எட்டுப் பிராந்தியங்களில் கடமையாற்றிய பழுத்த அனுபவமுடையவர். இலங்கையில் தற்போதைய யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணி 2002 மார்ச்சில் ஆரம்பமானபோதே அப்பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர். இலங்கையின் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்கான தலைமைப்பணியில் நீண்ட காலம் சேவையாற்றியவர். அத்தகைய அனுபவசாலி ஒருவர் தமது பொறுப்பிலிருந்து வெளியேறும் சமயத்தில் இந்த யுத்தப்பிணக்குத் தொடர்பாகத் தெரிவிக்கும் கருத்துகள் முக்கியமானவை. அவற்றில் இரண்டு விடயங்கள் அதிமுக்கியத்துவம் பெறுகின்றன.

ஒன்று - கிழக்கிலும் வவுனியாவிலும் - துணை இராணுவப் படைகள் போன்ற - ஆயுதக்குழுக்கள் செயற்படுவதை அவர் உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

மற்றது - "விடுதலைப் புலிகள் அமைப்பு, அல் - குவைதா போன்ற ஒரு பயங்கரவாத அமைப்பல்ல. அது சுதந்திரத்துக்காகப் போராடும் விடுதலை அமைப்பு. அந்த அமைப்புக்கு எதிரான போரில் இலங்கை இராணுவம் வெல்ல முடியாது." - என்று அவர் கூறியிருக்கிறார்

வவுனியாவிலும் கிழக்கிலும் ஆயுதக்குழுக்கள் இயங்குவதை உறுதிப்படுத்தியுள்ள ஹொக்லண்ட் அக்குழுவினரை கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் பலதடவைகள் சந்தித்துப் பேசியிருப்பதையும் அம்பலப்படுத்தியிருக்கின்றார்.

தாம் தமது பதவியிலிருந்து விலகிச் செல்வதற்கு முன்னர் ஹொக்லண்ட், இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு எழுதிய இரண்டு பக்கக் கடிதத்தில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள வாழைச்சேனைப் பகுதியில் சாதாரண உடையில் ஆயுதங்களுடன் செயற்படும் இந்தக் குழுவினரைப் பல தடவைகள் கண்காணிப்புக்குழுவினர் கண்டிருக்கின்றனர் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.

இப்படிக் கருணா குழுவினர் ஆயுதங்களுடன் செயற்படுவதை மக்கள் கண்டிருக்கும் பல சம்பவங்களையும் அவர் இக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார் எனத் தெரிகின்றது.

இதன்மூலம் துணை ஆயுதப் படைகளாகத் தமிழ்க் குழுக்களை இலங்கை அரசு ஸ்தாபித்து, ஊக்குவித்து, ஆதரவு கொடுத்து, வளர்த்து, தனது சதித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்குப் பயன்படுத்தி வருகின்றது என்ற தமிழர் தரப்பின் குற்றச்சாட்டு வலுப்படுத்தப்பட்டிருக்கின்றது. இவ்விடயத்தில் இலங்கை அரசின் சாக்குப்போக்கு விளக்கத்தை சர்வதேச மட்டத்தில் வலுவிழக்க வைத்திருகின்றது விடைபெற்றுச்செல்லும் கண்காணிப்புக் குழுத்தலைவரின் கருத்து.

மற்றைய விடயம் - விடுதலைப்புலிகள் சுதந்திரத்துக்காகப் போராடும் விடுதலைப் போராளிகள், அவர்களை இலங்கை இராணுவத்தால் வெல்லவே முடியாது என்ற கருத்தை - இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் இலங்கை ஜனாதிபதியின் சகோதரருமான கோட்டபாய ராஜபக்ஷவிடமே நேரடியாகத் தெரிவித்திருக்கின்றார் ஹக்ரூப் ஹொக்லண்ட்.

இராணுவத்திலும் போரியல் கலையிலும் நிபுணத்துவம் பெற்ற ஒருவர் - சர்வதேச ரீதியில் பல்வேறு பிணக்குகளுக்குரிய பிராந்தியங்களில் நேரடியாகச் சேவையாற்றி இவ்விடயத்தில் பழுத்த பட்டறிவைப்பெற்ற ஒருவர் - இந்த மதிப்பீட்டை முன்வைத்திருக்கின்றார். அதன் ஆழம் இலங்கை அரசுத்தரப்புக்கு - குறிப்பாக அரச பாதுகாப்புப் பிரிவினருக்கு - விளங்கிக்கொண்டதோ தெரியவில்லை.

யுத்த முனைப்பை விடுத்து, நீதியான - நியாயமான - நிலைத்து நீடிக்கக்கூடிய - தீர்வு ஒன்றைத் தமிழர்களுக்கு வழங்குவதன்மூலம் இந்த இனப்பிணக்கை முடிவுக்குக் கொண்டுவாருங்கள் என்பதுதான் ஹொக்லண்டின் மேற்படி கருத்துக்குப் பின்னால் தொக்கி நிற்கும் அர்த்தமும் ஆலோசனையுமாகும்.

தென்னிலங்கை அரசியல் முறைமைக்கு இந்த உண்மை புரியுமானால் - விளங்குமானால் - அமைதித்தீர்வு விரைந்து கிட்டும். ஆனால், அந்த உண்மையைத் தென்னிலங்கை புரியாமல் இருப்பதுதான் இலங்கைத்தீவின் துரதிஷ்டம்.

வெற்றி கொள்ள முடியாத ஒரு யுத்தத்தை - தமிழர்களுக்கு நீதிவழங்க முடியாது என்ற இறுமாப்பில் - தொடர விரும்புகின்றது தென்னிலங்கை. அதன்மூலம் இந்த அழகிய இலங்கைத்தீவை போரழிவுக்குள்ளும், பேரழிவுக்குள்ளும் நிரந்தரமாகத் தள்ளிவிட அது முயல்கிறது.

தங்களுடைய தாயகப் பகுதியில் தனிநாட்டுக்குரிய அடிப்படைக் கட்டுமானங்களை அமைத்து ஒரு தேசமாக எழுந்து நிற்கிறது தமிழ்த் தேசியம். அதன் உரிமைக் குரலுக்கு நியாயமான தீர்வு ஒன்றைத் தென்னிலங்கை தரத் தவறுமானால் - போரில் வெல்ல முடியாமல் வடக்கு - கிழக்கில் தனிநாடு அமைவதை அது விட்டுக்கொடுக்க வேண்டிவரும். அதுதான் இன்றைய யதார்த்தம்.

# வேலணை வாசிகளான தந்தையும் மகனும் ஜேர்மனியில் கார் விபத்தில் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப்.3

ஜேர்மனியில் இடம்பெற்ற வீதி விபத்து ஒன்றில் ஈழத்தமிழர்களான தந்தையும் மகனும் உயிரிழந்தனர்.

வேலணையைச் சொந்த இடமாகக் கொண்ட விநாயகமூர்த்தி கிருபாமூர்த்தி (வயது52), மகனான கிருபாமூர்த்தி வசந்தரூபன் (வயது 18) இருவருமே விபத்தில் உயிரிழந்தனர்.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஜேர்மனியில் குடும்பமாக வசிக்கும் இவர்கள் அங்கு சொந்தமாக வர்த்தக நிறுவனம் ஒன்றை நடத்தி வந்தனர். கடந்த செவ்வாய்க்கிழமை தந்தையும் மகனும் தமது வர்த்தக நிறுவனத்தில் இருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம் அவர்கள் பயணம் செய்த கார் ஹன்டர் வாகனம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகிறது.

மகனான வசந்தரூபன் விபத்து நடந்த இடத்திலேயே உயிரிழந்தார். தந்தை கிருபாமூர்த்தி படுகாயங்களுடன் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டு அங்கு மரணமானார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக ஜேர்மனி பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ-14)(18)

# யாழ். நகரிலும் சாவகச்சேரியிலும் கொமர்ஷல் வங்கியின் புதிய கிளைகள்

யாழ்ப்பாணம், ஏப்.3

யாழ். நகரிலும், சாவகச்சேரியிலும் கொமர்ஷல் வங்கியின் இரண்டு கிளைகள் இந்தவாரம் ஆரம்பிக்கப்படுகின்றன.

சாவகச்சேரி நகரில், கண்டி வீதியில், இலக்கம் 7இல் அமைந்துள்ள கட்டடத்தில் நிறுவப்பட்டிருக்கும் புதிய கிளை இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.20 மணியளவில் - சுபநேரத்திற்கு திறந்து வைக்கப்படுகிறது.

யாழ். நகரில் ஸ்ரான்லி வீதியில் - முன்னர் தபாலகம் அமைந்திருந்த கட்டடத்தில் - நிறுவப்பட்டிருக்கும் வாடிக்கையாளர் சேவை நிலையம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.

இந்த இரண்டு அலுவலகங்களினதும் ஆரம்ப வைபவத்தில் கொமர்ஷல் வங்கியின் தலைமையக அதிகாரிகளும் யாழ்ப்பாண அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சாவகச்சேரியில் திறக்கப்பட இருக்கும் கிளையில் நாடு முழுவதும் உள்ள கொமர்ஷல் வங்கிக் கிளைகள், வாடிக்கையாளர் சேவை நிலையங்கள், 'மினி கொம்' நிலையங்களின் வலை அமைப்பின் உதவியுடன் கணக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், தொலைபேசி வங்கிச் சேவை, செல்லிடத்தொலைபேசி வங்கிச் சேவை, இன்ரநெற் வங்கிச்சேவை வசதிகளும் கொம் சக்தி லீசிங் வசதிகளையும் வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ளமுடியும்.

ஸ்ரான்லி வீதியில் திறக்கப்படவுள்ள வாடிக்கையாளர் சேவை நிலையத்திலும் இந்த எல்லா வசதிகளும் ஏற்படுத்தப்பட உள்ளன. (ஐ-7) (27)

# வயற்பாடசாலை உறுப்பினர்களுக்கு கால்நடை வளர்ப்பு பயிற்சிப் பட்டறை

வலி.தென்மேற்கு, ஏப்.3

விவசாய வயல் பாடசாலை வறுமை ஒழிப்புக்குழுவின் மாதகல் மற்றும் பிரான்பற்று உறுப்பினர்களுக்கான கால்நடை வளர்ப்பு விழிப்புணர்வுப் பயிற்சிப்பட்டறை நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு பண்டத்தரிப்பு பல நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'கெயர்' நிறுவனத்தினால் யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் உள்ளூர் ஆக்கங்களினை முன்னெடுத்துச் செல்லும் திட்டத்தின் கீழ் இந்தப் பயிற்சிப்பட்டறை நடத்தப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிப்பட்டறையில் பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்துகொள்வார். கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ச.சுப்பிரமணியமும் சிறப்புவிருந்தினராக கெயர் நிறுவன பிரதித்திட்ட பணிப்பாளர் திருமதி யோய் ஞானேஸ்வரனும் கலந்துகொள்வர்.

'இலாபகரமான ஆடு வளர்ப்பை ஊக்குவித்தலும் தொழுவம் அமைத்தலும்' என்ற விடயம்பற்றி சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரியும்- 'கோழி வளர்ப்பு - அடிப்படைப் பராமரிப்பு முறைகளும் பயன்களும்' என்ற விடயம் பற்றி வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரியும் -

'சிறந்த முறையிலான பாற்பசு பராமரிப்பு'என்ற விடயம் பற்றி தெல்லிப்பழை கால் நடை வைத்திய அதிகாரியும் - இப் பயிற்சிப் பட்டறையில் கலந்கொண்டு கருத்துரைவழங்குவர்.

(எ-135)(18)

# தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு பாரம்பரிய விளையாட்டுக்கள்

## மீசாலை சனசமூக நிலையம் நடத்தும்

தென்மராட்சி,ஏப்.3

மீசாலை கிழக்கு சித்தி வேலாயுதர் சனசமூக நிலையத்தினர் தமிழ்ப் புத்தாண்டையொட்டி தமிழ் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ளனர்.

தரம் 10 வகுப்புக்கு மேல் கற்கும் மாணவர்களுக்கு மரதன் ஓட்டப் போட்டியும் முன்பள்ளி மாணவர்கள் பெற்றோர்கள், பார்வையாளர்கள் ஆகியோருக்கு பல்வேறு போட்டிகளும் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், போர்த்தேங்காய் உடைத்தல்,தலையணிச் சண்டை, முட்டி உடைத்தல் போன்ற போட்டிகளும் நடத்தப்படும்.

மரதன் ஓட்டப்போட்டிகள் எதிர்வரும் 13 ஆம் திகதியும் ஏனைய போட்டிகள் 15ஆம் திகதியும் நடத்தப்படும்.

மரதன் ஓட்டப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் பாடசாலை அதிபரின் சிபார்சுடன் எதிர்வரும் ஏழாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்று நிலையச் செயலாளர் யோ. செந்திமயூரம் தெரிவித்தார். (எ-117)(18)

## நாளை

பங்குனி 21
செவ்வாய்க்கிழமை
04.04.2006
திதி : சஷ்டி
முற்பகல் 09.10
நட்சத்திரம் : மிருகசீரிடம்
பிற்பகல் : 05.13
சுபநேரம் : 10.40 - 12.10
ராகுகாலம் : 03.10 - 04.40
(யாவும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

தற்புகழ்ச்சி எங்கே முடிவடைகின்றதோ அங்கே கண்ணியம் துளிர் விடுகிறது.

- யவ்.



உ
ஓம் சக்தி
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!



# யாழ். வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய
## (நாச்சிமார் கோயில்)
## ஜீர்ணோத்தாரண நவகுண்டபக்ஷ ஸ்வர்ணபந்தன பிரதிஷ்டா
## மஹா கும்பாபிஷேகச் சிறப்பு மலர் - 03.04.2006





## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி



ஆதிபராசக்தியாக விளங்குகின்ற அகிலாண்டகோடி பிரும்மாண்ட நாயகியான உமையவள் யாழ்ப்பாணத்து வண்ணை மாநகரிலே கோயில்கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் இடம்தான் நாச்சிமார் கோயில் என வழங்கும் குளங்கரை மருதடி ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயம்.

தம்மை வழிபாடியற்றுகின்ற அடியவர்களுக்கு அருளை அள்ளிச் சொரியும் தாயாக விளங்கும் ஸ்ரீ காமாக்ஷி அம்பிகைக் கும் மற்றும் பரிவாரமூர்த்திகளுக்கும் இன்று திங்கட்கிழமை பகல் மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

இதில் ஒரு விசேஷம் என்னவென்றால் இந்த அம்பாளுக்கு நடைபெறுவது ஜீர்ணோத்தாரண நவகுண்டபக்ஷ சுவர்ண பந்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகமாகும். இது ஒரு புண்ணியப் பேறு.

இந்த அகிலத்தில் வாழ்கின்ற சர்வகோடி ஜீவராசிகளுக்கும் இவளே அன்னை. காசியில் விசாலாட்சியாகவும் காஞ்சியில் காமாக்ஷியாவும் மதுரையில் மீனாட்சியாகவும் அருள்பாலிக்கும் சக்தியான இந்த அம்பிகை இந்த வண்ணையிலே பொன்வண்ணத்தவரின் குலதெய்வமாகக்காட்சியளிக்கின்றாள்.

வானளாவ உயர்ந்த இராஜகோபுரமும் அழகிய வர்ண வேலைப்பாடுகளுடனும் சித்திரங்கள் கூடிய அமைப்புடனும் விளங்கும் இந்த ஆலயம் காண்போரைக் கரங்கூப்பிச் சிரந்தாழ்த்தி வணங்கச்செய்துவிடும் புதுப்பொலிவுடன் காட்சி தருகின்றது.

இன்று நடைபெறும் கும்பாபிஷேகம் ஆலய நிர்வாகத்தினரதும் அடியார்களதும் விடாத பெருமுயற்சியினாலே வெகு விரைவில் திருத்த வேலைகள் நிறைவேறி திருவருள் வசத்தினால் கைகூடியிருப்பதை எண்ணும்போது உள்ளம் இறும்பூதெய்துகின்றது.

எல்லோருக்கும் அருள்புரிந்து சகல மக்களும் சுபீட்சமாகவும் அமைதி, சமாதானத்துடனும் வாழ்வதற்கு அம்பிகை கிருபாகடாட்சம் புரியவேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம். அத்தோடு, நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து அனைவருக்கும் அருள் கிடைக்கவேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## அன்னையின் அருள்பெற அன்பர்களே வாரீர்!
## கருணை மிகு காமாக்ஷியே கடைக்கண்பாராய் அம்மா!!

உலகெல்லாம் காத்து ரட்சிக்கின்ற அன்னை ஆதிபராசக்தியானவள் "காமாக்ஷி" என்னும் ரூபந்தாங்கி யாழ்ப்பாணத்திலேயுள்ள வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலில் எழுந்தருளி வீற்றிருந்து தம்மை வழிபடும் அடியார்களின் அல்லல்போக்கி இன்னல் களையும் இடுக்கண்களையும் அறவே களைந்து அருளாட்சி [illegible]கின்றாள். அண்ட சராசரங்களையும் ரட்சிக்கின்ற அம்பிகையை நாம் வணங்குகின்றோம்.

அடியார்களின் உள்ளங்களில் உறைந்திருக்கும் அருள்மிகு அன்னை ஸ்ரீ காமாக்ஷி அம்பிகைக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் இன்று மதியம் மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு நாம் இறும்பூதெய்துகின்றோம். இன்றைய நாள் ஒரு பொன்னான நன்னாள்.

ஆன்மாக்களுக்கெல்லாம் அருட்தாயாக விளங்குகின்ற எமது ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை இந்த ஆலயத்திலே எழுந்தருளி விநாயகர், சுப்பிரமணியர் சமேதராகக் காட்சி தரும் அழகே தனி. விஸ்வகர்ம குலத்தைச் சேர்ந்த பஞ்ச கம்மாளர்களில் ஒருவரான பொற்றொழில் செய்யும் விற்பன்னர்கள் இவளைத் தமது வழிபடு தெய்வமாக்கி வேறெங்குமே இல்லாதவாறு புதியதோர் ஆல யத்தை அழகுற அமைத்துள்ளார்கள்.

வானுயர்ந்த வண்ணக்கோபுரமும் கண்ணைக் கவரும் அழகு வர்ண வேலைப்பாடுகளும் இந்த ஆலயத்துக்கேயுரிய தனிச் சிறப்பாகும்.

முற்றிலும் புதியதோர் அமைப்பில் உருவாக்கப் பெற்றுள்ள ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் கோயில் சரித்திரப் பிரசித்திபெற்ற வரலாற்றுப் புகழ்மிக்க புதுமையும் அருளும் புனிதமும் நிறைந்த தனிப்பெரும் வணக்கஸ்தலமாகும்.

தமது இனத்தின் பிதாமகராக விளங்கும் விஸ்வப் பிரமாவுக்கும் புதிதாக ஓர் ஆலயம் அமைத்து அத்தெய்வத்தை இங்கு பிரதிஷ்டை செய்துள்ளமை போற்றுதற்குரியது. உலகிலேயே இதுதான் முதல் ஆலயம்.

'அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாமே! நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத்தீர்ப்பு' என்பதற்கிணங்க எமது துன்பங்கள் யாவும் விலகி சமாதானம் நிலவவும் அமைதிவரவும் சுபீட்சம் தழைத்தோங்கவும் எல்லாம் வல்ல அன்னை அகிலாண்ட கோடி பிரும்மாண்ட நாயகியான வண்ணை ஸ்ரீகாமாக்ஷி அம்பாளை வேண்டித் துதித்து அருட்பிரவாகத்தில் குளித்துப் பேரானந்தப் பெருவாழ்வுக்கு வழி சமைப்போமாக.

சிவநெறிக் கலாநிதி **இராசையா ஸ்ரீதரன்.**

## அருள் தாராயோ அம்பிகையே!

வண்ணையில் வீற்றிருக்கும்
வடிவழகி ஸ்ரீ காமாக்ஷி
கண்ணை இமை காப்பதுபோல்
காத்தருளும் அம்பிகையே!

ஆதி பராசக்தி நீயே அருள்புரிவாய் தாயே
நீதியை நிலைநாட்டி நிம்மதியைத் தான் தருவாய்!

நாதியற்ற நாங்கள் உன்னை
நம்பியே வந்துவிட்டோம்
சோதியாய் ஒளி வீசி
எங்குமே நிறைந்திடுவாய்!

காமாக்ஷி அம்பிகையே கைதொழுதோம் அம்மா!
நீயாட்சி புரியும் இந்த வண்ணையே சொர்க்கம் அம்மா!

- கவிமணி-


நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த நிறுவனம்
**வினோ நகைப்பூங்கா**
(தங்க, வைர, நகை வியாபாரம்)
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
FAX: 222 2824
222 5394

தரமான தங்க நகைகளுக்கு சிறந்த இடம்
**ஸ்ரீ அம்மன் நகையகம்**
(இரத்தினக் கற்கள் வியாபாரம்)
224, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777 478805
Prop.: T.Uthayan

அழகிய நவீன வேலைப்பாடுகளுடன் கூடிய நகைகளுக்கு
**தயா நகைப் பூங்கா**
213C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
222 5846
அசல் 22 கரட் தங்க நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

**சாரங்கா நகைமாடம்**
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ். 021 222 2480
அழகிய கண்ணைக் கவரும் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு சிறந்த இடம்
**சாரங்கன் நகைமாடம்**
45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6059

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நம்பிக்கையோடு நாடவேண்டிய நாணயமான ஸ்தாபனம்
**நியூ நகுலா ஜுவல்லறி**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 74
021 222 5511
ஒருமுறை வந்து பாருங்கள்!

அசல் 22 கரட் தங்க நகைகள் அதியுயர்ந்த இரத்தினக்கற்கள் பெற்றுக்கொள்ள இன்றே விஜயம்செய்யுங்கள்
**கவியரசு நகைப் பூங்கா**
190, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
நவநாகரிக நங்கையர் விரும்பும் நவீன டிசைன்களுக்கு நம்பிக்கையான இடம் இது!

**JAFFNA ELECTRICALS**
141, Power House Road,
JAFFNA.
021 222 5766
FAX: 021 222 2552
MOBILE: 0777238542
6, Stanley Road, Jaffna.
021 222 2353
Authorised Dealers for Abans Ltd.
Distributors for KML Cables.

கண்கவர் பட்டுச்சேலைகளுக்கு கைராசியான இடம்தான்
**மகாநதி புடைவையகம்**
முகூர்த்தப்பட்டுப் புடைவைகளுக்கு அதிர்ஷ்டமான ஸ்தாபனம் இது ஒன்றே.
16, நவீன சந்தை,
16, நவீன சந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2552
04, நவீன சந்தை.
01, நவீன சந்தை (மேல் மாடி).
சாவகச்சேரி.
T.P.: 0712 370437

(24-11-14)

நவநாகரிக நங்கையர் விரும்பும் நவீன டிசைன்களுக்கும் உத்தரவாதமுள்ள உறுதியான வேலைகளுக்கும் இன்றே விஜயம் செய்யுங்கள்.
**ரூபி நகை மாளிகை**
111/1, 227, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ஓடர்கள் குறித்த தவணையில் செய்துகொடுக்கப்படும்.
2828
3038
5128
**RUBE JEWELLERY, JAFFNA.**


இன்று நண்பகல் 12 மணிக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

# தாவளை - இயற்றாளை, கரம்பைக்குறிச்சி கிராமங்களுக்கு மின்சாரம் கிடைத்தது

தென்மராட்சி, ஏப்.3

வரணிப் பிரதேசத்தில் உள்ள இரு கிராமங்கள், முதன்முறையாக மின்சார வெளிச்சத்தைப் பெற்றுள்ளன.

தாவளை - இயற்றாலை, கரம்பைக் குறிச்சி ஆகிய கிராமங்களே இவ்வாறு மின்சார வசதியைப் பெற்றுள்ளன எனக் கூறப்பட்டது.

தாவளை-இயற்றாளைப் பகுதிக்கான மின் விநியோகம் கடந்த வியாழனன்று கல்வளைப் பிள்ளையார் கோயிலிலும் -

கரம்பைக்குறிச்சிப் பகுதிக்கான மின் விநியோகம் கடந்த வெள்ளியன்று ஆழ்வார் மடத்தடியிலும் வைத்து ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

தாவளை - இயற்றாளைக்கான மின் விநியோகம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-117) (27)

# சமூக அபிவிருத்தி மையத்திற்கு சண்டிலிப்பாயில் புதிய கட்டடம்

வலி.தென்மேற்கு, ஏப்.3

வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவுக்கான சமூக அபிவிருத்தி மையக் கட்டடம் சண்டிலிப்பாய் சீரணி நாகபூசனி அம்மன் ஆலயத்திற்கு மேற்குப் பக்கமாகவுள்ள காணியில் நிறுவப்படவுள்ளது.

இந்தப் பிரிவில் சிறுவர் - முதியோர் மற்றும் வலுவிழந்தவர்கள் ஆகியோரின் நலன்களை முன்னெடுத்துச் செல்வதற்கும் - செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கும் இந்த சமூக அபிவிருத்தி மையம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மையத்தை நிறுவுவதற்கு மூன்று பரப்புக் காணி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும்-

சுமார் 80 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்தக் கட்டடம் விரைவில் நிறுவப்படவிருப்பதாகவும் - வலி. தென் மேற்கு பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135) (27)

# 'மில்க்வைற்' வெளியீடுகளை ஆவணப்படுத்த காந்தி சேவா சங்கம் நடவடிக்கை

'மில்க்வைற்' வெளியீடுகளையும் பிரசுரங்களையும் ஆவணப்படுத்தும் வேலைத் திட்டம் ஒன்றை அகில இலங்கை காந்தி சேவா சங்கம் ஆரம்பித்துள்ளது.

இயற்கை வாழ்வுக்கு முதன்மை கொடுத்து சமுதாயப் பணியாற்றி வந்த சிவநெறிப் புரவலர் க.கனகராசாவின் பணிகளைக் கௌரவிக்கும் நோக்குடனும் -

இளைய சந்ததியினர் மத்தியில் சூழல் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வை உருவாக்கும் வகையிலும் -

இளைஞர், யுவதிகளை சமூகப்பணியில் நாட்டம்கொள்ளச் செய்யும்வகையிலும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்க விரும்புபவர்கள், தம்மிடம் உள்ள 'மில்க்வைற்' வெளியீடுகளையோ அல்லது சிவநெறிப்புரவலர் கனகராசா தொடர்பான செய்திகளையோ, 'அகில இலங்கை காந்திசேவா சங்கம், இல. 171, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கமுடியும் என்று சங்கத்தின் பிரசார செயலாளர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி அறிவித்துள்ளார். (எ)(33)



*செல்வி பவித்திரா எட்வின் கிறிஸ்ரி எழுதிய 'நடனச் சுவடுகள்' எனும் நூல் வெளியீடும் அவரது நாட்டிய நிகழ்வும் அண்மையில் மன்னார் நகரசபை மண்டபத்தில் வி.தயானந்தராஜா தலைமையில் இடம்பெற்றன. கலைஞர்கள், கல்விசார் சமூகத்தினர், அரச, அரசசார்பற்ற நிறுவனத் தலைவர்கள் எனப் பலர் கலந்துகொண்ட இந்நிகழ்வின் இறுதியில் எடுக்கப்பட்ட படம் இது.*

*அருட்சகோதரி மேரி பாஸ்கல், மன்னார் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தலைவர் மரியநாயகம், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், நூலாசிரியர் பவித்திரா எட்வின் கிறிஸ்ரி, திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளார், மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.ஹெவல், பிரபல கலைஞர் குழந்தை ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர். (ஐ)(33)*

## தவக்காலச் சிந்தனை 34

### பெரியோரை மதித்து மதிப்படைவோம்

கீழ்ப்படிவு என்பது சமூகத்தின் பல மட்டங்களிலும் இன்று கேள்விக்குறியாகவுள்ளது பெரியோரை ஏளனம் செய்தல், ஆசிரியர், பெற்றோரின் அறிவுரைகளை உதாசீனம் செய்தல் அதிகாரிகளுக்குப் பணிவின்மை, மூத்தோரின் பட்டறிவை புறந்தள்ளுதல் என்பவையே பல சமூகச் சீர்கேடுகளுக்கும் சமுதாய பிறழ்வுகளுக்கும் காரணிகளாய் உள்ளன.

பெரியோர்கள் பல அனுபவங்களையும் சவால்களையும் தாண்டிவந்தவர்கள். இவர்களின் புத்திமதிகள் இளையோரை நெறிப்படுத்தி வளப்படுத்தும் என்பதை உணரவேண்டும்.

'பிள்ளைகளே! உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள். ஆண்டவரின் அடியாருக்கு இதுவே ஏற்புடையது. உன் தந்தையையும் தாயையும் மதித்து நட. இதனால் நீ மண்ணுலகில் நீடூழி வாழ்வாய்' (எபே. 6:1-2)

பல வயோதிபப் பெற்றோர்கள் கைவிடப்பட்டும் அன்பு, பாசம், ஆறுதல், உதவிகளற்றும் தனிமையில்வாடுகின்றனர். பல பிள்ளைகள் ஓகோவென்றிருந்தாலும் பெற்றோரைக் கவனிப்பதில்லை. வயோதிபப்பெற்றோரை அவமானமாக எண்ணுகிறார்கள். இவர்கள் இல்லாது இளைய தலைமுறை எவ்வாறு உருவாகியது; வளமாகியது என்பதை சிந்திக்கவேண்டும்.

இயேசு தன் முப்பது வயது மட்டும் பெற்றோருடன் அமைதி வாழ்வு வாழ்ந்தார். கானாவூரில் தாயின்வேண்டுதலை ஏற்று புதுமை புரிந்தார்.

குடும்ப அமைப்பின் கட்டுமான முறைகளைக் கற்றுத்தந்த இயேசுவின் பாதையில் இன்றைய இளையோர் பயணித்தால் வீடும் நாடும் நலம்பெறும். பெரியோரை மதித்து நாமும் மதிப்புப்பெறுவோம். அவர்களின் ஆசி எம்மை நீடூழி வாழவைக்கும். - எஸ்.யேசுதாஸ், *கொழும்புத்துறை.(24)*





மெற்றோபோலிற்றன் ஒப்பிஸ்மற்றும் நவகலா நிறுவனத்தின் அனுசரணையுடன் தமிழ் செய்தி தகவல் மையம் யாழ். இந்துக் கல்லூரியில் நடத்திய சதுரங்கப் போட்டியின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நவகலா நிறுவனத்தைச் சேர்ந்த கே.[illegible], மெற்றோ போலிற்றன் ஒப்பிஸ் நிறுவனத்தைச் சேர்ந்த எஸ்.சிறிகரன், எஸ்.[illegible] தமிழ் செய்தி தகவல் மையத்தைச் சேர்ந்த ஜே.பாரதி ஆகியோர் போட்டியைப் பார்வையிடுவதையும் மாணவர்கள் போட்டியில் கலந்துகொண்டிருப்பதையும் படங்களில் காணலாம். (3)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் லீக் முறையிலான ஆண், பெண் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பெண்கள் பிரிவில் வட்டபிளை வி.கவும் கே.ஸி.ஸி.ஸி. வி.கவும் மோதுகின்றன. (3-190)

# டெஸ்ட் ஆட்டங்களிலிருந்து சனத் ஜெயசூரிய ஓய்வு



இலங்கையின் முன்னணி துடுப்பாட்ட வீரர் சனத் ஜெயசூரிய சர்வதேச டெஸ்ட் ஆட்டங்களிலிருந்து ஓய்வுபெற முடிவு செய்துள்ளார்.

ஒருநாள் ஆட்டங்களில் தொடர்ந்து விளையாடப்போவதாகவும் மேற்கிந்தியத் தீவுகளில் இடம்பெறும் உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்க தயாராகவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலங்களாக சனத்ஜெயசூரிய தோள்பட்டையில் ஏற்பட்ட காயத்தால் அவதிப்பட்டுவருகின்றார். இதனாலேயே அவர் டெஸ்ட் ஆட்டங்களிலிருந்து ஓய்வுபெற்று ஒருநாள் ஆட்டங்களில் தீவிர கவனம் செலுத்த முடிவுசெய்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிராக நாளை கண்டியில் ஆரம்பமாகும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டம்தான் தான் ஆடப்போகும் கடைசி டெஸ்ட் ஆட்டம் என ஜெயசூரிய கூறியுள்ளார்.

சனத் ஜெயசூரிய இதுவரை 101 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி, 6599 ஓட்டங்களைக் குவித்துள்ளார். 92 டெஸ்ட் விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளார்.

1991ஆம் ஆண்டு ஹாமில்டனில் நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில்தான் ஜெயசூரிய அறிமுகமானார். 1999ஆம் ஆண்டு இலங்கையணிக்கு தலைவராகப் பொறுப்பேற்று 2003ஆம் ஆண்டுவரை இலங்கையணியின் தலைவராக இருந்துள்ளார். (3)(33)




# சுதேசிய திருநாள் உதைபந்தாட்டம்: செயலக, மாநகரசபை அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம்,ஏப்.3

அரியாலை 87ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவினை முன்னிட்டு கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் முதல் ஆட்டங்களில் யாழ். செயலக வி.க., யாழ். மாநகர சபை வி.க. ஆகியன வெற்றிபெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் மாவட்ட செயலக விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மதுவரித் திணைக்கள விளையாட்டுக்கழக அணி மோதியது.

மாவட்ட செயலக விளையாட்டுக்கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றோர் ஆட்டத்தில் யாழ். மாநகர சபை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இலங்கைபோக்குவரத்துச் சபை விளையாட்டுக் கழக அணி மோதியது.

யாழ். மாநகரசபை விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (3-190)(33)

# யாழ். பிரதேச மட்டத்திலான எல்லே போட்டி முடிவுகள்

யாழ். பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடைபெறும் ஆண்களுக்கான எல்லே சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் சிலவற்றின் முடிவுகள் வருமாறு-

- திருவள்ளுவர் வி.க. அணிக்கும் வட்டபிளை வி.க அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் வட்டபிளை வி.க. அணி 4:3 என்ற புள்ளியில் வெற்றிபெற்றது. பாடுமீன் வி.க அணிக்கும் கே. ஸி. ஸி. ஸி. வி.க. அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் பாடுமீன் வி.க.அணி 7:5 என்ற புள்ளியால் வெற்றிபெற்றது.
- சென். றோக். வி.க.அணிக்கும் சாள்ஸ் வி.க. அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் சென் றோக் வி.க. அணி 4:2 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.
- ஈச்சமோட்டை வி.க.அணிக்கும் பாரதி வி.க. அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் பாரதி வி.க. அணியினர் 1:0 என்ற புள்ளியால் வெற்றி பெற்றனர்.
- போர்த்ஸ்ரார் வி.க. அணிக்கும் கொய்யாத்தோட்டம் ஐக்கிய வி.க. அணிக்கும் இடையில் இடம் பெற்ற ஆட்டத்தில் போர்த்ஸ்ரார் வி.க. அணியினர் 2:1 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றனர்.
- போர்த்ஸ்ரார்விக அணிக்கும்ஜெற்லைனர்ஸ் வி.க. அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஜெற்லைனர்ஸ் வி.க.அணியினர் 1:0 என்ற புள்ளிஅடிப்படையில்வெற்றி பெற்றனர்.(3-190)(54)

# கொக்குவில் மாணவி சம்சுக்கா நீண்டதூர ஓட்டத்தில் 3 சாதனை



நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்ற கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டியில் நீண்டதூர ஓட்டப் போட்டியில் 16 வயது மாணவி மூன்று புதிய சாதனைகளை நிலைநாட்டியுள்ளார்.

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த இரட்ணசிங்கம் சம்சுக்கா (வயது 16) என்ற மாணவியே இந்தச் சாதனைகளைப் புரிந்தவர் ஆவார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் மாணவியான இவர், கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தின் சார்பில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்ற கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டார்.

10 ஆயிரம் மீற்றர், 5ஆயிரம் மீற்றர் மற்றும் ஆயிரத்து அறுநூறு மீற்றர் ஆகிய தூர ஓட்டப் போட்டிகளிலும் கடந்த ஆண்டுகளில் இருந்த சாதனையை முறியடித்துப் புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்துடன், கழகங்களுக்கு இடையேயான வலைபந்தாட்ட அணி, கூடைப்பந்தாட்ட அணி என்பவற்றிலும் கலந்துகொண்டு சிறப்பாக ஆடினார். (3-86)(33)

## வரணி வீதி புனரமைப்பு

தென்மராட்சி, ஏப்.3

மீசாலையிலிருந்து மந்துவில் ஊடாக வரணிக்குச் செல்லும் வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த வீதியைப் புனரமைக்குமாறு கோரி மந்துவில் பகுதி மக்கள் உரிய அதிகாரிகளுக்கு முறையிட்டமை தொடர்பான செய்தி கடந்த வருடம் பிற்பகுதியில் உதயனில் பிரசுரமானது தெரிந்ததே. (எ-117)(23)

## மனதார வாழ்த்துகின்றோம்

"பாலோடு அளாவிய நீர் பாலாகுமல்லாதே நீராக நிறம் திரிய மாட்டாது"

என்னும் வெண்பா அடிகளின் படி வங்கித்துறையில் கற்றுத்துறை தேர்ந்த முகாமையாளர் திரு.எஸ்.ரவீந்திரா அவர்களின் பாசறையில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றை தாரக மந்திரமாகக் கொண்டு 'தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்த பின் தன் நெஞ்சே தன்னைச் சுடும்.' என்ற குறள் வாக்குப்படி பல வருடங்கள் யாழ்.வர்த்தக வங்கியில் உதவி முகாமையாளராகப் பணிபுரிந்த திரு.எஸ்.வி.குருபாதம் அவர்களும் நிறைவேற்று அதிகாரியாக இருந்த திரு.குபேரகுலேந்திரன் அவர்களும் முறையே சாவகச்சேரியிலும், யாழ்.ஸ்ரான்லி வீதியிலும் திறக்கப்படவுள்ள புதிய கிளைகளுக்கு முகாமையாளர்களாகப் பதவியேற்கும் இவர்கள் மேல் இறைவன் தன் அருள் மாரியை அமோகமாகப் பொழியவும், உடல் உள வளத்துடன் நன்கு பணியாற்றவும், இலங்கையில் கடந்த பல வருடங்களாக உலக வங்கி ஆய்வாளர்களால் முதன்மையான வங்கி எனப் பெயர் பெற்ற இலங்கை வர்த்தக வங்கி, வருங்காலத்தில் தெற்காசியாவிலேயே முதன்மையான வங்கியெனப் பெயர் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்

இளைப்பாறிய ஊழியர் ஆரோக்கிய நாதனும்,
சகல இளைப்பாறிய ஊழியர்களும்.

(48528)
(23-18-11-14)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 05-03-1951 மறைவு 05-03-2006

**திருமதி**
**மகாலிங்கம் பரமேஸ்வரி**

திதி 03.04.2006

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (03.04.2006) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

Kasernen Str-09
3250 Lyss, Scheweiz,
Switzerland.

மகாலிங்கம்(கணவர்),
சுதன், சுரேஸ்(மகன்மார்),
நர்மதா(மகள்),
மா.கோவிந்தர்(மைத்துனர்).

(48819)(23-18-11-14)

## சமய சந்நிதிகளில்

நல்லூர், ஏப்.3

நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் ஆலய வருடாந்த திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 10 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும நடைபெறும். (எ-111-203)(23)

* * *

கோப்பாய், ஏப்.3

கோப்பாய் மத்தி காளியம்பாள் ஆலய பரிவார மூர்த்திகளான விநாயகர், வள்ளி, தெய்வானை சமேத முருகப்பெருமான் ஆலய ஆலயங்களுக்கான நூதன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு நடைபெறவுள்ளது. (எ-72-203)(23)

* * *

மூளாய் வதிரன்புலோ முத்துக்குமார சுவாமி ஆலய வருடாந்த பெரும் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், 11 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.(எ-203)(23)

## சமுர்த்திப் பயனாளிகளுக்கு நிவாரணமுத்திரைகள்

தென்மராட்சி, ஏப்.3

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி பயனாளிகளுக்கான நிவாரண முத்திரைகள் அந்தந்த பகுதிகளுக்கான சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

2006 ஜனவரி தொடக்கம் ஜூன் வரையிலான ஆறு மாத காலத்திற்குரிய நிவாரண முத்திரைகளே இவ்வாறு வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)(23)

## பாடசாலைகளுக்கிடையில் சமூக நாடகப்போட்டி

புங்குடுதீவு அந்தோனியார் தெய்வக் குழந்தைகள் இல்லம் புங்குடுதீவுப் பகுதியில் உள்ள பாடசாலைகளிடையில் நடத்தும் நாடகப்போட்டி இம் மாதம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

மனித நேயம்,விடுதலை, சமாதானம், ஒழுக்கம் என்பவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு நடத்தப்படவுள்ள இந்த சமூக நாடகப்போட்டிக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஏற்றுக்கொள்ளப்படும் என்று தலைவர் க.பூராசா தெரிவித்தார்.

தொழில் அதிபர் கா.தில்லைநாதனின் ஆதரவுடன் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்காதவாறு பங்குபற்றுமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரம் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (எ-111)(18)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 - 10 - 1921



உதிர்வு 08 - 04 - 2003

**அமரர் சிற்றம்பலம் கனகசபை**

(ஓய்வுபெற்ற அரச எழுதுவினைஞர்)

திதி: பூர்வபக்க ஷஷ்டி 03.04.2006

அன்பின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் கடமையின் இருப்பிடமாய்
தந்தைக்கு எடுத்துக்காட்டாய் இருந்து
எம்மை ஆறாத்துயரில் மூழ்க வைத்து
மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

புகையிரத வீதி,
மாவிட்டபுரம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(48862)(23-18-11-14)

## மூன்றாம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 08 - 08 - 1985



மறைவு 03 - 04 - 2003

**அமரர் மரியதாஸ் பிரதீபன்**

மூன்றாண்டு ஆயிடினும்
முடியவில்லை நம் துயரம்
மீண்டு நீ இங்கு வரவேண்டும்
கூடி நாம் உன்னுடன் வாழவேண்டும்!

பக்கஸ் லேன்,
மானிப்பாய்.

என்றும் உன் நினைவுடன்
-குடும்பத்தினர்.

(48887)(26-18-11-14)




## SATS- TECH இன் சிறப்புத் தள்ளுபடி விற்பனை மற்றும் பரிசுத்திட்டம்

KU BAND டிஸ் அன்ரனா சிஸ்டம்
*உத்தரவாதத்துடன்
** ரூபாய் 9000/= மட்டுமே

இலவசம்!
தெரிந்து எடுக்கப்படும்
அதிர்ஷ்டசாலிக்கு இன்னும்
ஒரு சிஸ்டம் இலவசம்

* ஒருவருட உத்தரவாதம். முடிந்த பின்னரும் திருத்தம் செய்வதற்கான உதிரிப்பாகங்கள் எம்மிடம் கிடைக்கும்.

* இச்சலுகை ஏப்ரல் 15 வரை மட்டுமே.

கேபிள் ரிவிக்கு உரிய அனைத்துத் தரமான உபகரணங்களும் மிகக் குறைந்த விலையில் கிடைக்கும்

**SATS - TECH** நிறுவனமானது இலங்கையில் செய்மதி தொலைக்காட்சி மற்றும் கேபிள் **T.V.** உபகரணங்களை நேரடியாக இறக்குமதி செய்து உத்தரவாதத்துடன் விற்பனை மற்றும் திருத்தம் செய்ய **TRC** இன் **Vendor Licence** (02244/06/**N**) உள்ள ஒரு நிறுவனமாகும். (48340(51-11-18-14)

மேலதிக விவரங்களுக்கு: SATS - TECH ENGINEER (நஷனல் விடியோ சென்ரர்) 182, கே.கே.எஸ். வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம். T.P.: 021 222 5908 Hot Line: 0777-710785

SATS TECH ENGINEERS


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்தும் அழைப்பும்

03.04.2006



செல்வப் புதல்வி ராகினி

"சிகரம்"
அரசடி வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

**திரு.திருமதி தெ.சிவராஜ் தம்பதியரின்**
**செல்வப் புதல்வி ராகினி**

*தனது முதலாவது பிறந்தநாளை இன்று (03.04.2006) திங்கட்கிழமை திருநெல்வேலியிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மையா, அம்மம்மா, பெரியம்மா, பெரியப்பா, சித்தப்பாமார்கள், சித்தி, மாமாமார்கள், மாமிமார்கள் அக்கா, அண்ணாமார்கள், மச்சாள்மார்கள் மற்றும் உற்றார்,உறவினர்கள் பத்திரகாளி அம்பாள் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.*



தெ. சிவராஜ் (அப்பா)

(48867)(18.11.14)

# தமிழர் தாயகத்தில் புனர்வாழ்வுக்கழகம் முன்பள்ளிகளைச் சிறப்புற நடத்துகிறது

## கிளிநொச்சி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் புகழாரம்

வட்டக்கச்சி, ஏப்.3

தமிழர் புனர்வாழ்வுக்கழகமானது தாயகப் பிரதேசத்தில் முன்பள்ளிகளைச் சிறப்பாக நடத்திவருகிறது.

இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி கல்வி வலயக் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர் கோ.செல்வராசா கல்மடுநகர் சுதாங்கனி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

போரினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட எமது பிரதேசம் கல்வி ரீதியான பல்வேறு பின்னடைவுகளைச் சந்தித்துவரும் இந்த நிலையில் தமிழர் புனர்வாழ்வுக்கழக முன்பள்ளிக் கட்டமைப்பு சிறப்பாக இருப்பது எமது சிறார்களுக்கு ஒரு வாய்ப்பாகும். எந்தக் கிராமத்திற்குச் சென்றாலும் அங்கு சிறப்பாக முன்பள்ளிகள் தற்போது நடைபெற்றுவருகின்றன. சிறார்களின் கல்வி வளர்ச்சியால் ஆரம்ப நிலையில் கல்வி வழங்கும் இம்முன்பள்ளிகளின் ஆறு வயது நிரம்பியவுடன் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளை 4, 5 வயதுகளில் முன்பள்ளிகள் தயார்ப்படுத்துகின்றன.

முன்பள்ளியில் தயார்ப்படுத்தப்படாத பிள்ளைகள் பாடசாலைகளில் சிறப்பான கல்வியில் பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலையில் காணப்படுகின்றனர் என்று ஆய்வுகள் பறைசாற்றி நிற்கின்றன.

எனவேதான் கல்வி வலயங்களிலும் முன்பள்ளிக்கென தனியான உதவிக் கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டு இம் முன்பள்ளிகள் மெருகூட்டப்படுகின்றன. எனவே, பெற்றோர்கள் தமது பிள்ளைகள் எதிர்காலத்தில் சிறந்த சமூகச் சிற்பிகளாக உருவாக பூரண ஒத்துழைப்பைக் கல்விச் சமூகத்திற்கு வழங்க வேண்டும் - என்றார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம், ஆகியவற்றின் அனுசரணையுடன் கரைச்சி வடக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற சுதாங்கனி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த 29ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி அபிவிருத்திக்குழுத் தலைவர் க.தேசன் தலைமையில் ஆரம்பமாகியது.

விசேட நிகழ்வுகளாக சிறார்களின் உடற்பயிற்சி நிகழ்வும், வினோத உடைப்போட்டியும் நடைபெற்றன. தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. (த-405) (27)



ஏ - 9 பிரதான வீதியில் புளியங்குளத்திற்கு சமீபமாக கடந்த மாதம் 17ஆம் திகதி லொறி ஒன்று தடம்புரண்டது. வீதி ஓரமாகக் குடை சாய்ந்த நிலையில் காணப்படு கின்ற லொறியையே இங்கு காண்கிறீர்கள்.

(படம்: புளியங்குளம் செய்தியாளர்) (27)

# மல்லாவி மத்திய கல்லூரியில் பள்ளிச் சேமிப்பு அலகு திறப்பு

தமிழீழ வைப்பகத்தினரால் மல்லாவி மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட பள்ளிச் சேமிப்பு அலகு கடந்த வாரம் திறந்துவைக்கப்பட்டது.

மல்லாவி மத்திய கல்லூரி மாணவன் கு. குகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வை கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி பு. பாலசுப்பிரமணியம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ வைப்பகத்தின் பணிப்பாளர் சோழமறவன் ஏற்றி வைத்தார். கல்லூரிக் கொடியைக் கல்லூரி அதிபர் தி.சத்தியபாலன் ஏற்றிவைத்தார்.

பள்ளிச் சேமிப்பு அலகின் பெயர்ப்பலகையை துணுக்காய் உதவி அரச அதிபர் நா.நந்தகுமார் திரைநீக்கம் செய்துவைத்தார். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.குரூஸ் பள்ளிச் சேமிப்பு அலகினை நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

துணுக்காய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் அருந்தவம் முதலாவது பள்ளிச் சேமிப்புக் கணக்கினை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து தமிழீழ வைப்பத்தின் ஆளுகை மேலாளர் பாலகிருஸ்ணன் சேமிப்பின் முக்கியத்துவம் பற்றி மாணவர்களுக்கு விளக்கமளித்தார்.

மாணவர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழீழ வைப்பகத்தால் திறக்கப்பட்ட 5ஆவது பள்ளிச் சேமிப்பு அலகு இது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் மாணவர்களுக்கான 'அமுதம்' தேட்டக்கணக்கு பல மாணவர்களால் திறக்கப்பட்டது. (த-322)(24)

# கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் உயரம் பாய்தலுக்கான மெத்தை இல்லை

அக்கராயன்,ஏப்.3

கிளிநொச்சி வலயப் பாடசாலைகள் ஒன்றில் கூட உயரம் பாய்தலின்போது பயன்படுத்தப்படும் பஞ்சுமெத்தை இல்லாததினால் மாணவர்கள் போட்டிகள், பயிற்சிகளை மேற்கொள்ளுவதில் இடர்களை எதிர்கொள்கின்றனர்.

கிளிநொச்சி கல்வி வலய மாணவர்கள் விளையாட்டுகளில் பல சாதனைகள் நிகழ்த்தி வருகின்றனர்.

சாதனைகள் நிகழ்த்திய பல மாணவர்கள் யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்குச் சென்றே பயிற்சி உபகரணங்களைப் பெற்று பயிற்சிகளைப் பெறவேண்டியிருக்கின்றது.

இது விடயம் தொடர்பாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் விளையாட்டு அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், இன்றைய மாணவர்களின் கல்வி விளையாட்டு செயற்பாடுகளுக்கு பயிற்சிகள் அவசியம். பயிற்சி உபகரணங்கள் மாணவர்களுக்குக் கிடைக்கவேண்டும். இல்லையேல் மாணவர்கள் சாதனைகளை நிகழ்த்த முடியாது என்றும் கூறினார். (த-420) (27)

# வீதிகள், வாய்க்கால்களில் குப்பைகளை கொட்ட வேண்டாமென அறிவுறுத்து

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் கோரிக்கை

புதுக்குடியிருப்பு,ஏப்.3

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் வீதிகள் வாய்க்கால்களில் குப்பை கூழங்களைக் கொட்டுவதைத் தவிர்க்குமாறு புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளரும் விசேட ஆணையாளருமான சி.தயானந்தா வேண்கோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது பிரதேச வீதிகள் அகலமாக்கப்பட்டு பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தவேளையில் குப்பை கூழங்கள் வீதிகள், வாய்க்கால்களில் கொட்டுவதனால் பல சுகாதாரச் சீர்கேடுகள், தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளது. இதனை மக்கள் அனைவரும் உணர்ந்து செயற்பட்டால் அனைவருக்கும் நல்லது.

பிரதேச சபையினால் கழிவு அகற்றல் செயற்பாடுகள் நடத்தப்பட்ட வண்ணம் உள்ளன. எனினும் மக்கள் குப்பைகூழங்களைக் கண்டபடி கொட்டுவதனால் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுகிறது. எனவே, இதனைக் கருத்தில் எடுத்து மக்கள் செயற்படவேண்டும் என்று அவர் மேலும் கேட்டுக்கொண்டார். (த-353) (27)

# முல்லைத்தீவு வலயத்தில் இலவச கணனிப் பயிற்சி

புதுக்குடியிருப்பு,ஏப்.3

முல்லைத்தீவு வலயத்தினால் நடத்தப்படவுள்ள இலவச கணனிப்பயிற்சி வகுப்புக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கிளிநொச்சி வன்னிச் செய்திகள்

முறைசாரக் கல்விப் பிரிவின்கீழ் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, வித்தியானந்தாக் கல்லூரி ஆகிய இரு பாடசாலைகளிலும் இந்த இலவச கணனிப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தெரிவித்தார்.

நாளை செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக விண்ணப்பிக்கப்படவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (த-353) (27)

# போக்குவரத்துக்கு உதவாத நிலையில் புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் வீதி

புதுக்குடியிருப்பு, ஏப்.3

புதுக்குடியிருப்பு, மந்துவில் சந்தியில் இருந்து ஆனந்தபுரம் செல்லும் வீதி மக்கள் பயணிக்க முடியாத நிலையில் சேதமடைந்துள்ளது.

கடந்த ஒருமாதத்திற்கு மேலாகத் திருத்தம் செய்வதற்காக வீதியின் இரு மருங்கிலும் பாரிய வடிகால் வாய்க்கால் வெட்டப்பட்டு அந்தமண் வீதியில் கொட்டப்பட்டுள்ளன.

இதனால் இந்த வீதியால் மக்கள் பயணம் செய்யமுடியாமல் உள்ளனர். தமது தேவைகளுக்காக பல கிலோமீற்றர் தூரம் சுற்றியே செல்லவேண்டிய அவலம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஒரு மாதத்திற்கு மேலாக இவ்வாறு வெட்டிப் போடப்பட்டுள்ள மண்ணைப் பரவி வீதியை ஓரளவாவது மக்கள் பயணம் செய்யக்கூடியதாக மாற்றுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. (த-353) (27)

# உடையார்கட்டு தபாலகத்தை தரமுயர்த்தக் கோரிக்கை

புதுக்குடியிருப்பு, ஏப்.3

உடையார்கட்டு தபாலகத்தினை தரம் உயர்த்துமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1976ஆம் ஆண்டு ஒரேயொரு ஊழியருடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தபாலகம் இன்றும் பல்வேறு வசதியீனங்களின் மத்தியில் இயங்கிவருவதாகக் கூறப்பட்டது.

உடையார்கட்டு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் சுமார் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றபோதிலும் தற்போதும் ஓர் ஊழியர் மட்டுமே இங்கு கடமையில் உள்ளார் என்றும் -

உடையார்கட்டு, இருட்டுமேடு, குரவில், சுதந்திரபுரம், மூங்கிலாறு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இந்தத் தபாலகத்தையே பயன்படுத்திவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆளணிப்பற்றாக்குறை காரணமாக இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தபால் சேவையைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் -

சம்பந்தப்பட்ட தபாலகம் தரம் உயர்த்தப்பட்டால் ஆளணி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படலாம் என்றும் - பொதுமக்கள் தெரிவித்தனர். (த-353) (27)

## புதிய நிர்வாகம் தெரிவு

வட்டக்கச்சி,ஏப்.3

கல்மடுநகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினதும் மாதர் சங்கத்தினதும் புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை பிரதான மண்டபத்தில் கல்மடுநகர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கி.யோகநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக இ.யோகநாதனும் செயலாளராக அ. அன்ரனிராஜாவும் பொருளாளராக சி.சிவச்செல்வனும் உபதலைவராக கோ.நக்கீரனும் உப செயலாளராக யூட் உதயகுமாரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுடன் ஆறு நிர்வாகக் குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

மாதர் சங்கத்தின் தலைவராக திருமதி க.கமலாம்பிகையும் செயலாளராக திருமதி பு.ஜெயவாணியும் பொருளாளராக திருமதி சி.சுமதியும் உபதலைவராக திருமதி த.லலிதரஞ்சினியும் உப செயலாளராக திருமதி த. தவமணியும் மற்றும் ஆறு நிர்வாகக் குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (த-405)(24)






கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் கந்தபுரம் பொது நூலகத்திற்கு யு.என்.டி.பி. திட்டத்தின் கீழ் ஒரு தொகுதி நூல்கள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் அக்கராயன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் மாறன் தேசியக் கொடியேற்றுவதையும் யு.என்.டி.பியின் பிரதிநிதி க.சண்முகலிங்கம் கந்தபுரம் பொது நூலகத்தின் நூலகர் மு.சிவலிங்கத்திடம் நூல்களைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: அக்கராயன் செய்தியாளர்) (27)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 06 - 04 - 1943 இறப்பு 04 - 03 -2006

அமரர்

**கதிர்காமு பாலசிங்கம்**

எம்மை விட்டுப் பிரிந்த நீங்கள்
என்று எம்மிடம் மீண்டும் வருவீர்கள்?

வள்ளிப்பிள்ளை -மனைவி,
ஜெகதீஸ்வரி, நகுலேஸ்வரி -பிள்ளைகள்,
கந்தசாமி, சிவசுப்பிரமணியம் -மருமக்கள்,
கிரின்டன்,கிரிதரன்,கிருஸ்ணாமதி -பேரப்பிள்ளைகள்.

தகவல்:கந்தசாமி (மருமகன்), புலோலி.

48871)(26.11)

# வல்லைப் பாலத்தில் புதிதாக காவலரண்கள்

குடத்தனை,ஏப்.3

வல்லைப் பாலப் பகுதியில் படையினர் புதிதாக காவலரண்களை நிறுவி வருகின்றனர்.

இந்தப்பகுதியில் ஏற்கனவே, காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் மேலும் மேலும் புதிதாக தற்போது காவலரண்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

வல்லைப் பாலத்தின் தொடக்கத்திலும் முடிவிலுமே தற்போது காவலரண்கள் அமைக்கப்பட்டுவருகின்றன.

(எ-78)(26)

## 30 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 04 - 03 - 1951



மறைவு 05 - 03 - 2006

**திருமதி பரமேஸ்வரி மகாலிங்கம்**

(சுவிற்ஸர்லாந்து)

எனது சகோதரியின் 30 ஆம் நாள் நினைவுத் துயரில் மூழ்கி இருக்கும் குடும்பத்தினருடன் நாமும் பங்கு கொண்டு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

மூளாய் தெற்கு, சுழிபுரம். (48864)(26.11)

தகவல்: கோவிந்தசாமி, இராஜேஸ்வரி குடும்பம்.





ஏக விநியோகஸ்தர்கள்
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்)லிமிட்டட்
காட்சியறை : 524, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. 2324261-5, 2337283-5, 2436779 பெக்ஸ் : 2446554
விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப் பொருள்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.




முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்
License No.: 50443
License No.: KM41240
Access Graphics
ஏக முகவர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10
தொலைபேசி: 337286 (நேரடி), 324261-5, 337283-5
பெக்ஸ்: 446554
விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
WATERTEC
முத்திரையை அவதானியுங்கள்


## குடத்தனையில் ஈச்சம்பழ சீஸன்

குடத்தனைப் பகுதியில் தற்பொழுது ஈச்சம் பழச் சீஸன் ஆரம்பமாகியுள்ளது. ஈச்சம் மரங்களில் குலை குலையாக ஈச்சங் காய்களும், பழங்களும் காணப்படுகின்றன. ஈச்சம்பழங்களை சிறுவர்கள் பறித்து உண்பதுடன் அவற்றை குலையாக வெட்டி வீடுகளுக்கும் கொண்டு செல்கின்றனர். (எ-78)


136வது மைல்கல்




இந்து சமுத்திரம் சூழ்ந்த யாழ்ப்பாணக் களப்புக்கு அண்மையில் அமைந்துள்ள சாவகச்சேரி, தெற்காசியாவின் மிகப் புராதன குடியேற்றங்களில் ஒன்றாக, வரலாறு குறிப்பிடுகிறது.

இப்பிரதேசம், இப்போது மக்கள் தொகை செறிந்த செழிப்பான பகுதியாகியுள்ளது. மேலும், நெல், மா, வெங்காயம் போன்ற பயிர்களால் தன்னிறைவும் கண்டுள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் பெற்ற சாவகச்சேரி விரைவாக விருத்தி பெறுகிறது. இந்நகரின் பொருளாதார அபிவிருத்திக்கு வலுவான தொடர்பாளராக, இப்பிரதேச மக்களின் பணத்தேவைகளை நிறைவேற்ற, கொமர்ஷல் வங்கியின் புதிய கிளை வருகிறது.

இலக்கம் 7, கண்டி வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள கொமர்ஷல் வங்கியின் இந்தப் புதிய கிளை 2006 ஏப்ரல் 03 ஆம் திகதி திங்கட் கிழமை மு.ப. 10.20 க்கு சுபவேளையில் திறந்து வைக்கப்படுகிறது. இதில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கிறோம்.

கொமர்ஷல் வங்கி

தொலைபேசி (முகாமையாளர்) 021-2229675 (பொது) 021-2229676-7 (தொலைநகல்) 021-2229678)

முதன் முறையாக யாழ் நகரில் *Tally*

பல்கலைக்கழக மாணவர்கள், AAT, CIMA, CMA, IAB, HND(UK), HNDA, Charted(SL), A/L வர்த்தக பிரிவு மாணவர்கள் மற்றும் கணக்கியலில் ஆர்வமுடையவர்கள் இத்தேர்வில் பங்குபற்றலாம்.

30 நிமிடங்களில் 30 வணிகம் மற்றும் கணக்கியல் கேள்விகளுக்கு விடையளித்து 60% வரையான கட்டணக்கழிவை பெறுங்கள்.

கணக்கியல் மென்பொருள் கற்கைநெறி
*(Certified Computer Accountant)*




Tally GRADUATE
ies 7.2
AIT 2006
ACCOUNTANCY INTELLIGENCE TEST
Super Exclusive Offer
March 15th to April 20th
முன்பு கல்விக்கு ஏற்றவேலை
இனி வேலைக்கு ஏற்றகல்வி

VAT Enabled Tally

பரீட்சை பற்றிய மேலதிக விபரங்களுக்கு கீழ்குறிப்பிட்ட எமது நிலையங்களை நாடுங்கள்

ASIAN -CSC COMPUTER EDUCATION
101, 2ம் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021-222 8196
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 5677

## சனசமூக நிலையங்களில் புதிய நிர்வாகத் தெரிவை நடத்துமாறு கோரிக்கை

வலி.தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேசசபைப் பிரிவில் இயங்கும் சகல சனசமூக நிலையங்களுக்கும் இவ்வருட (2006) இற்கான வருடாந்த பொதுக்கூட்டத்தை நடத்தி அதில் புதிய நிர்வாக சபையைத் தெரிவுசெய்து அது பற்றிய அறிக்கையை பிரதேச சபைக்கு விரை வில் அனுப்பி வைக்கவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. இம் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் இந்த அறிக்கையை அனுப்பிவைக்கவேண்டும் என்றுபிரதேச செயலாளர் மே.சாந்தசீலன் தமது பிரிவிலுள்ள சனசமூக நிலையங்களின் தலைவர் / செயலாளருக்கு அனுப்பி வைத் துள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

(எ-135)(26)


**STP** Your Partner in IT Solutions

**NEW COURSES**

73, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P:2222674. www.stpjaffna.com

| | |
|---|---|
| DIP. IN MS OFFICE | 4 Months |
| DIP. IN HARDWARE TECHNOLOGY | 6 Months |
| DIP. IN DESKTOP PUBLISHING | 4 Months |
| DIP. IN COMPUTER ACCOUNTING | 4 Months |
| INTERNET TECHNOLOGY | 2 Months |

Start: 15/04/2006



**உடன் விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள 9 SRI WOXAGEN CAR (1300 yolts), 9 SRI BAJAJ SCOOTER உம் புதிய வீடும் விற்னைக்குண்டு.

தொடர்பு:-
37/1 A, சிவன் அம்மன் றோட், முத்துமாரியம்மன் மேற்கு வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(48900)(26.11.17)



**CATWAS**

No.26, Somasundram Avenue, Chundukuli, Jaffna.
TP: 021 222 3805

**Diploma in English**

ஆங்கிலத்தில் ஒரு பூரண அறிவைப் பெற்றுக் கொள்ளவும் தரமிக்க Diploma சான்றிதழை பெற்றுக் கொள்ளவும் சிறந்த விரிவுரையாளரால் இக் கற்கை நெறி மேற்கொள்ளப்படுகின்றது

- உச்சரிப்பு
- ஆங்கில சொற்பிரயோகம்
- இலக்கணம், இலக்கியம்

ஆங்கிலத்தை நவீன தொழில்நுட்ப முறையில் கற்று உரையாட, எழுத, வாசிக்க ஆர்வம் உடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

Commence on 05.04.2006

Duration 4 Months



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (03-04-2006) திங்கட்கிழமை தேசியசேமிப்பு வங்கியின் வடக்கு - கிழக்கு வலய முகாமையாளராக பதவியேற்கும் திரு.மயில்வாகனம் சிவானந்தா அவர்கள் மேன்மேலும் பதவி உயர்வுகள் பெற்று, மனமகிழ்வுடன் நீடூழி வாழ எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திரு. மயில்வாகனம் சிவானந்தா

முகாமையாளரும் ஊழியர்களும், தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்.

(48848)(26.11.17)



## Vacancy - Immediate

## Storekeeper - Purchaser

COMITE INTERNATIONAL GENEVE

The International Committee of the Red Cross, Kilinochchi Subdelegation, is seeking for a highly competent professional for the role of a Storekeper Purchaser in its Logistics Department.

The canditate should have the following **qualifications:**

- Minimum G.C.E. Ordinary level.
- 3 years experience in a similar capacity.
- Ability to handle Microsoft Office.
- Good communication skills, Fluent in English & Tamil knowledge of Sinhala will be an asset.
- Good Analytical skills.
- Responsible and adaptable.

**Core responsibilities** include:

- Reception and inspection of incoming goods and distribution.
- Ability to handle Delivery forms, packing lists Bin cards.
- Maintain a systematic inventory.
- Assist the Logistic Assistant in discharge of his duties such as purchasing, process purchasing orders, maintaining purchase register and up dating of item prices.

**Employment Conditions:**

According to ICRC's National scale and employment conditions.

Suitable candidates are invited to submit their complete CVs (incl, photocopy of valid driving licence) to ICRC's office in Kilinochchi until **Friday, 14th of April 2006.** Qualified candidates will be contacted for interviews.

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS,**
**Subdelegation Kilinochchi,**
**Iranaimadhu Junction, Kilinochchi.**
**Phone: 071 237 5697 ' 071 270 2403 / 071 270 6118.**

(C/48656)(32)



அன்புடன் அழைக்கின்றோம் !

கண்காட்சிக்கு!!

## மிதிவெடி செயற்பாட்டின் விழிப்புணர்வுக்கும் பங்களிப்புக்குமான சர்வதேச தினம் – சித்திரை 04

- மிதிவெடியினால் பொதுமக்கள் பாதிக்கப்படுவது இன்று உலகளாவிய ரீதியில் பூதாகரமான பிரச்சனையாக உருவெடுத்துள்ளமையால், ஐக்கிய நாடுகள் அமையம் சித்திரை 04 ஐ மிதிவெடி செயற்பாட்டின் விழிப்புணர்வுக்கும் பங்களிப்புக்குமான சர்வதேச தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.
- யாழ். குடா நாட்டில், இத் தினத்தின் ஆரம்ப நிகழ்வு சித்திரை 04 அன்று, செவ்வாய்க் கிழமை காலை 09.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.
- இத் நாளின் விசேட நிகழ்வாக, மிதிவெடி செயற்பாடு சம்பந்தமான கண்காட்சி யாழ். இந்துக்கல்லூரியில் அன்றையதினம் நடைபெறவுள்ளது.
- உலகில் மிதிவெடியினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இடங்களில் ஒன்றான எமது பிரதேசத்தில் நடாத்தப்படவுள்ள இக்கண்காட்சியை கண்டுகளித்துப் பயன் பெற, வயது வேறுபாடின்றி அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம்
யாழ்ப்பாணம்

தொ. பே: 021 222-3886

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வாடகைக்கு

நல்லூர் செட்டித்தெருவில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நாள் வாடகைக்கும் வழங்கப்படும்.
தொடர்பு: **0773186842** (48852)

## வாடகைக்கு அல்லது விற்பனைக்கு

வேம்படிச் சந்திக்கு அருகில் முதலாம் குறுக்குத் தெரு இல.175 இல் அமைந்துள்ள 9அறைகளுடன் கூடிய சகல வசதியும் கொண்ட மேல் மாடிவீடு வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு.தொடர்பு: K.கோபால், **TP:.077 6366020, 021 4591883.**

## விற்பனைக்கு

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்த கடை ஒன்றும் நாவலர் வீதியில் இரண்டு மாடிக் கட்டடத்தில் அமைந்த கடைக் கட்டடத்தொகுதியும் காணித்துண்டும். கஸ்தூரியார் வீதியிலுள்ள கடை ஒன்றும் உடன் விற்பனைக்குண்டு.தொடர்பு: கனகசபை, தர்மகுலசிங்கம் இல.332, ஆஸ்பத்திரி வீதி, (மரக்கறிச் சந்தைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (மாலை 3 மணி தொடக்கம் 6 மணிவரை)
(48673)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் சந்திக்கு அண்மையில் 3 பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: **0712505729**
(48885)

## காணி விற்பனைக்கு

இல.29, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் சகல வசதிகளுடனும் கூடிய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: **T.p.:0776745812, 0776198191**
(48883)

## பசுமாடுகள் விற்பனைக்கு

பால் கறக்கும் **JC** இன கன்றுடன் கூடிய பசு மாடும், சினையுடன் கூடிய பசு மாடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.26, சீனிவாசகம் வீதி,யாழ்ப்பாணம். (48886)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட **No:1 Original Prima Broiler** குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 03.04.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், கரன் - ஆலடி, உடுவில், சந்நிதி பாம் - தொண்டைமானாறு, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/48502)

## கெட்டிக்காரர்கள்-இமயம்

பேராதனைப் பல்கலைக்கழக நாடகப் பணியின் தொடர்ச்சியாக கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய 21 நவீன நாடகங்களைக் கொண்ட இரு நூல்கள் மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமான நாடகங்கள். (48550)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்ப, 1970 அத்தம் 1, பாவம் 37, 5'2'' **UK** மணமகனுக்கு உள்ளூர் வெளியூர் மணமகள் தேவை.
**T.p.:0777251188** (48875)

## மணமகள்மார் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1964**(MBBS)Doctor,1969(MBBS)Doctor, 1975(MBBS) Doctor,1977**சிவில் எஞ்சினியர், **1974** பல் **Doctor,1969 (B.Sc.)** வங்கி அதிகாரி ஆகி யோரிற்கு அழகிய மணப்பெண்கள் தேவை. தொடர்பு:கிருஷ்ணா திருமணசேவை, T.சுப்பையா, 'அன்னை இல்லம்' ,செங்குந்தா வீதி,திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.**T.P.: 222 9032** (48907)

## தவறிவிட்டது

**NOKIA** கையடக்கத் தொலைபேசி ஒன்று கல்லுண்டாய் வெளியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும். 219,நாவலர்வீதி, யாழ்ப்பாண்ம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (48898)

வயிரவன் செல்வலிங்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (652792545V), விசேட அடையாள அட்டை (0905027417) என்பன பேசுடன் 22-03-2006 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 021 222 6235 என்ற இலக்கத்துடன் அல்லது வயிரவன் செல்வலிங்கம் ஆஸ்பத்திரி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.
(48964)


**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quickbooks Premier + MYOB

*Course Contents,*
Fundamentals of IT
Menual Accounting
Financial Accounting
Cost Accounting
Taxation (Including VAT)
Stock Control
Bank Reconciliation
Budgeting
Fore Casting
Business Planning

80%off

ஆகிய முன்னணி Accounting Software அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.
வகுப்புக்கள் ஆரம்பம் :-
Morning Batch:-
05/04/2006 :- 09.00
07/04/2006 :- 09.00
Evening Batch:-
05/04/2006 :- 04.30
07/04/2006 :- 04.30
Week Days Batch


தமிழீழக் கட்டுமானப் பொறியியற் செயலகம் - நடுவப் பணியகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழக் கட்டுமானப் பொறியியற் செயலகத்தால் கீழ்க்காணும் பணிநிலைக்கான வெற்றிடங்கள் தகுதியுடையோரிடமிருந்து கோரப்படுகின்றன.

**01.மொழிபெயர்ப்பாளர்**

* கட்டட நிர்மாணத்துறையுடன் நெருங்கிய தொடர்புடையவராகவும் பல்துறைசார் ஆங்கில விடயங்களை வழுவின்றி தமிழிற்கு மொழிபெயர்க்கும் திறன் உடையவராகவும், மொழி பெயர்ப்புத்துறையில் நீண்டகால அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**02. கணனித் தரவுப் பதிவுநர்**

* க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், கணிதம், ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
* கணனித்துறையில் Ms. Office கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தவராகவும், கணனி சார்ந்த பூரண அறிவுடையவராகவும், கணனித் தரவுச் செயற்பாட்டில் அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**03. தொழில்நுட்ப உத்தியோகத்தர்**

* க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ், கணிதம், ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றவராகவும் க.பொ.த. உயர்தரத்தில் சித்தி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
* தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் N.C.T. அல்லது தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ், N.D.T. அல்லது கட்டட நிர்மாண தொழில்நுட்ப சான்றிதழ் B.C.T. அல்லது தொழில்நுட்ப சேவை அது சம்பந்தமான தராதரப் பத்திரங்கள் உடையவராக இருத்தல்வேண்டும்.
* கட்டடத்துறையில் நீண்டகால அனுபவமுடையவராகவும், தொழிலாளர்களின் தொழிற் தகைமையை வரையறை செய்யக் கூடிய அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
* இப்பணிநிலைக்கு தகைமை உடைவர்களிடம் இருந்து தங்கள் சுயவிவரங்கள், சான்றிதழ்களுடன் கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள எமது நடுவப் பணிமனைக்கு எதிர்வரும் 05.04.2006 ஆம் திகதி காலை 10 மணிக்கு நேரில் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

(திரு. இ.துளசிமாறன்)
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
தமிழீழக் கட்டுமானப்
பொறியியற் செயலகம், தமிழீழம்.
(சி-48660) (54-17-14)
இல. 45 A, கனகபுரம்,
கிளிநொச்சி.
T.P.: 021 228 5178



## இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் இல்லறத்தில் இணையும் தம்பதிகள்

*அச்சுவேலியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் இன்று முதலாவது திருமண நிகழ்வ இடம்பெறுகின்றது. அந்த வகையில் இன்றைய தினம் இல்லறத்தில் இணைந்து கொள்ளும் மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த*

**முல்லைமாறன் - மஞ்சுளா** தம்பதிகள்

சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு வாழ்க! வாழ்க! என வாழ்த்துகின்றோம்.

T.P: 0602212424
0773053080
வீடியோ கலாமினி, அச்சுவேலி.
(சி-48662) (54-14-11)

## நெஞ்சை விட்டகலாத ஆறாண்டு நினைவலைகள்

உள்ளம் மகிழ
29 - 12 - 1985



நெஞ்சம் நெகிழ
10 - 04 - 2000

செல்வன் **முருகானந்தன் காண்டீபன்**
**திதி: வளர்பிறை ஷஷ்டி 03.04.2006**

கண்சிமிட்டும் விண்மீனாய்
வையகத்தில் நீ உதித்தாய் - எம்
கண்களிலே நீர் வழிய
உன் வழியை முடித்துவிட்டாய்
பாதி வழியினிலே நீ
எவ்விடம்தான் சென்றாயோ?

**உன்நினைவால் தவிக்கும்:**
அப்பா, அம்மா, அக்கா, தம்பி, தங்கை.

மீசாலை கிழக்கு,
மீசாலை.
(48905)(27)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18 . 12 . 1922



மறைவு
07 . 04 . 2003

அமரர் **குட்டித்தம்பி குருநாதன்** (ஜே.பி)
*திதி: 03.04.2006*

*பள்ளி சென்று துள்ளிவரப் பார்த்து மகிழ்ந்திரே! நாங்கள்*
*பட்டங்கள் பெற்றுப் பாரில் உயர்ந்திடக் காத்திருந்திரே!*
*பட்டங்கள் கிடைத்தது ஐயா - நீங்கள்*
*பார்த்து மகிழ இங்கில்லையே - மறைந்து*
*ஆண்டுகள் மூன்று கழிந்தாலும் எங்கள்*
*மனதை விட்டு நீங்க மாட்டீர்கள் ஐயா*
*நாங்கள் அமைக்கும் ஆலயமதில் என்றும்*
*ஆண்டவனாய் அமர்ந்திடுவீரே!*

பேரப்பிள்ளைகள்
ஜெகன் - தீபன்

ஏழாலை தெற்கு. மயிலங்காடு.
சுன்னாகம்.
(48903)(23)
(54-14-17)

## இரண்டாம் வருட நினைவஞ்சலி

தோற்றம்
10 - 01 - 1942



மறைவு
27 - 03 - 2004

அமரர்

### காசிப்பிள்ளை வைரமுத்து

*எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இலங்கிய தெய்வமே!*
*நிலையில்லா வாழ்வினிலே நீங்காத நினைவுகளைத் தந்து விட்டு*
*நீங்கள் மட்டும் எம்மை விட்டுப் பிரிந்து சென்றதேனோ ?*
*ஆண்டுகள் எத்தனை கடந்தாலும் ஆறிடுமோ நம் கவலை.*
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்...

இல. 84/1 A ,மானிப்பாய் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

மனைவி, மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.
(48901) (54-17-14)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசா பாக்கியம்



மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசா பாக்கியம் நேற்று (02.04.2006) ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் ஆறுமுகம் இராசா (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் கமலாம்பிகை, இராதா (ஆசிரிய ஆலோசகர், வலிகாம வலயம்), முருகதாஸ் (ஸ்ரீராம் ஸ்ரோர்ஸ் மூளாய்), ஸ்ரீதேவி (உதயன் பணிமனை, யாழ்ப்பாணம்), அரியதாசன் (லண்டன்), றஜனி, கலாறஞ்சினி (இத்தாலி), கமலலோஜினி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2006) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பித்தனை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் தெற்கு,
சுழிபுரம்.
(சி-48667)
(54-14-17)
தகவல்:
குடும்பத்தினர்.

### சங்கரப்பிள்ளை இராசையா



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை இராசையா அவர்கள் 01.04.2006 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பவளரத்தினத்தின் அன்புக் கணவரும் தர்மராஜா (ஜேர்மனி), மாகாஜெயம் (டென்மார்க்), வசிகலா(நல்லூர்), கண்ணதாசன் (நோர்வே), தர்மசீலன், கங்கா ஆகியோரின் அன்புத் தந்தையும் பேரின்பமலர், உதயலதா, தயாபரன் (நாயன்மார்கட்டு மகேஸ்வரி பாடசாலை அலுவலகப் பணியாளர்), பத்மநிதி ஆகியோரின் அன்பு மாமனும் கீர்த்தனா, நிதர்சனா,மதுஷன், பவிசன், வகிசன், விநோதன், தர்சிகா, கீர்த்திகா,மயூரி, பானுயா; மிதுயா, சாருஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் செல்வரட்ணம் குணமணி அவர்களின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.04.2006) ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குச்சப்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(48899)
(54-14-17)
தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்

# உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ள மக்களின் எதிர்காலம்?

## உயர் நீதிமன்றத்துக்கு யாழ். அரச அதிபர் சமர்ப்பித்துள்ள அறிக்கை

கொழும்பு,ஏப்.3

உயர்பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்பட்டுள்ள பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ள குடிமக்களை மீள்வும் அவர்களின் சொந்த இடங்களில் குடியமரச் செய்வதற்கு என்ன செய்யலாம் என்பது பற்றிய தமது கருத்துக்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை யாழ்ப்பாணம் அரச அதிபர் கே.கணேஷ் உயர் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ள இருவர் தம்மை மீளவும் தமது சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்கவேண்டும் என்று கோரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுக்கள் தொடர்பான விசாரணையின்போது இம்மனுதாரர்களை வேறு மாற்று இடங்களில் குடியமரச்செய்ய முடியுமா என்பதை ஆராயும் முகமாக உயர்நீதிமன்ற அறிவுறுத்தலின் பேரில் - மனுதாரர்களுடன் தாம் நடத்திய ஆலோசனைக் கலந்துரையாடல்களின் அடிப்படையில் - அரச அதிபர் தமது ஆலோசனைகள் அடங்கிய அறிக்கையை உயர் நீதிமன்றத்துக்குத் தாக்கல் செய்துள்ளார். அந்த அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

மனுதாரர் காசிப்பிள்ளை யோகேஸ்வரன் தமது நிலைப்பாட்டை விவரித்தபோது,தாம் ஒரு விவசாயி என்றும் விவசாயத்தைத் தவிர வேறு தொழில் எதனையும் அறிந்திருக்கவில்லையென்றும் கூறினார். அவருக்குச் சொந்தமான காணி உண்டு. அது உயர்விளைச்சலைத் தரும் செம்மண் தரை. அதிலிருந்து போதுமான வருமானம் கிடைத்துவந்தது. இந்த வருமானத்திலிருந்து கணிசமான அளவு செலவுசெய்து வீடு ஒன்றையும் கட்டியிருக்கிறார். அதில் கௌரவமாக வாழ்க்கை நடத்திவந்துள்ளார். காரணம் எதுவுமின்றி அங்கிருந்து அவர் வெளியேற்றப்பட்டு, தொடர்ந்து விவசாயம் செய்யமுடியாது டுக்கப்பட்டு நிர்க்கதிக்குள்ளாகியுள்ளார்.

அவர் மீளவும் தமது வீட்டுக்குத் திரும்ப விரும்புகிறார். விவசாயத்தை மீண்டும் ஆரம்பித்து கண்ணியமாக வாழ்க்கை நடத்த விரும்புகிறார். வேறு இடத்தில் குடியேறுவதையோ இழப்பீடு பெற்றுக்கொள்வதையோ அவர் மறுக்கின்றார்.

மனுதாரர் மாவை சோமசுந்தரம் சேனாதிராஜாவுக்கும் நாம் நடத்திய சந்திப்பின் நோக்கம் விளங்கப்படுத்தப்பட்டது.

மாற்றுத்திட்டம் ஒன்றுபற்றி ஆலோசிக்கும்போது தமது தனிப்பட்ட கஷ்ரங்கள் பற்றி மட்டுமல்லாமல் அதே சூழ்நிலைக்குள்ளாகியுள்ள ஏனைய தரப்பு மக்களின் நிலைமைகளையும் கருத்திற்கொள்ளவேண்டும் என்று அவர் கருதினார். உயர் பாதுகாப்பு வலயத்தின் சட்டபூர்வத்தன்மை குறித்து தாம் செய்துள்ள மனுவின்மூலம் தமக்கு மட்டும் அனுகூலங்களைத் தேடிக்கொள்வது நோக்கமல்லவென்றும் தம்மைப்போல் வெளியேற்றப்பட்டுள்ள ஏனையவர்களுக்கும் உதவிபுரிவதற்கு மாற்றுத்திட்டங்கள் அவர்களுக்கும் பொருந்துவதாய் இருக்கவேண்டும் என்றும் கூறினார். ஏதாவது சிறப்புச் சலுகைக்காக தாம் தனிமைப்படுத்தப்படுவதை அவர் விரும்பவில்லை. மாற்றுக் காணி எதையும் வேறு இடத்தில் பெற்றுக்கொள்வதையோ இழப்பீடுகளையோ அவர் விரும்பவில்லை. தம்மைத் தமது சொந்த நிலத்தில் போய் குடியிருக்க அனுமதிக்கவேண்டும் என்பது அவருடைய கோரிக்கை.

வலிகாமம் வடக்கு கோட்டத்தில் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தின் சட்டபூர்வத் தன்மையைக் குறித்ததே இவ்விருவரது மனுக்களின் உள்விடயமாகும். இது 58.5 சதுரகிலோமீற்றர் கொண்ட வளமிக்க செம்மண் நிலப்பிரப்பாகும். இது விளைச்சல் மற்றும் வருமானத்தில் வடபகுதியில் மிக உயர் உற்பத்தித்திறன் கொண்ட பகுதியாகக் கருதப்படுவது. வடக்கில் மீன் பிடியிலும் வருமானம் கூடிய கடல் பகுதியைக் கொண்டிருக்கிறது. 60 வீதமானவர்கள் விவசாயத்திலும் 30 வீதத்தினர் மீன்பிடித் தொழில்களிலும் ஈடுபட்டிருந்தனர். இந்த மக்கள் தமது வீடுகளில் குடியிருக்க மறுக்கப்பட்டுள்ளனர். வாழ்வியல் மறுக்கப்பட்டு 15 வருடங்களுக்கு மேலாக உலர் உணவில் தங்கியிருக்கிறார்கள். அரசினால் வழங்கப்படும் இந்த உலர்உணவு உயிரையும் உடலையும் ஒட்டவைத்துக் கொண்டிருக்கவே போதுமானதாக இல்லை. இப்பகுதியில் அவர்களின் வரலாற்று முக்கியத்துவமிக்க வழிபாட்டுத் தலங்கள் உள்ளன. இறந்தவருக்கான இறுதிக் கிரியைகளை இங்குள்ள கடற்கரையில்தான் நடத்துவார்கள். அவர்கள் தமது நிலங்களின்மீது மிகுந்த பற்றுகொண்டவர்கள். மாற்று இடங்களை வழங்கி இடப்பெயர்வை நிரந்தரமாக்க எடுக்கப்படும் எந்த முயற்சியும் நிலைமைகளை சிக்கலாக்கிவிடும்.

உயர் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள பிரதேசங்களின் பிரதேச, கோட்டமட்ட செயலாளர்களுடனும் ஆலோசனைகள் நடத்தினேன். ஆவ ணங்களையும் சரிபார்த்தேன். அதன்படி 36 கிராம சேவகர் பிரிவுகள் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் சிக்குப்பட்டுள்ளன. 15 ஆயிரத்து 482 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இதில் 65 ஆயிரத்து 756 உறுப்பினர்கள் அடங்குவர்.

மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயங்கள் அமைந்துள்ள பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ளவர்களில் இங்கிருந்துதான் பெருமளவானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு அரசு மாதம் 36 மில்லியன் ரூபா செலவில் உலர் உணவு வழங்கி பராமரித்துவருகின்றது. அடிக்கடி நடக்கும் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் காரணமாக மாவட்ட நிர்வாகம் அடிக்கடி முடக்கப்படுகின்றது. மாவட்ட நிர்வாகம் சுமுகமாக நடைபெற இப்பிரச்சினை விரைவாகத் தீர்க்கப்படுவது அவசியம்.

மேற்கண்ட நிலைமைகளைக் கருத்திற்கொள்ளும்போது, இந்த உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களை வேறு இடத்தில் குடியமர்த்துவதோ மாற்று நிலங்களை வழங்குவதோ பின்வரும் காரணங்களுக்காக நடைமுறைச் சாத்தியமோ விரும்பத்தகுந்ததோ அன்று:-

இவ்விரு மனுதாரர்களையும் அறிவுறுத்தி உயர்பாதுகாப்பு வலயத்துக்கு வெளியில் காணிகளை ஏற்றுக்கொள்ளச் செய்தாலும் கூட இடம்பெயர்ந்துள்ள ஏனையவர்களுக்கு காணிகள் வழங்கக்கூடிய அளவில் அரச காணிகளோ, தனியார் காணிகளோ கிடைப்பதாயில்லை. மேலே குறிப்பிட்டது போன்று 60 வீதமானவர்கள் விவசாயிகள், வேறு தொழில் தெரியாதவர்கள், அவர்கள் காணிகளையே கேட்டுநிற்பார்கள். இல்லையென்றால் அவர்களைப் பராமரிப்பது அரசுக்குப் பெரும் சுமையாகவே இருக்கப்போகின்றது. அதேபோல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் ஏனைய 30 வீதத்தினரும் தமது கடற்றொழில்களை ஆரம்பிக்க வசதிகளைக் கோரிநிற்பார்கள். இவைகள் அனைத்தையும் கவனத்தில் எடுத்து நாட்டின் நீண்டகால நலனைக் கருத்திற்கொண்டு வெற்றிகரமான பேச்சுவார்த்தை நடைமுறை ஒன்றைத் தோற்றுவிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கமுடியும் என்பது என் கருத்து. பாது காப்பு அக்கறைகளைக் கைவிடாமலேயே இடம்பெயர்ந்தவர்களைக் கட்டம் கட்டமாகக் குடியமர்த்துவதுடன் பொதுமக்களின் அடிப்படை மனித உரிமைகளும் நிலைநாட்டப்பட வேண்டும்.

- இவ்வாறு அரச அதிபர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(ப்)(33)

---

## ஈரான் மீது நடவடிக்கை வேண்டாம்

டெற்ரான்,ஏப்.3

ஐ.நா. சர்வதேச அணுசக்தி ஆணையத்தின் தலைவர் முகமத் பராடி ஈரான்மீது அணு ஆயுதம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுவதை எதிர்த்துள்ளார்.

ஈரானின் அணு ஆயுத உற்பத்திக்குத் தேவைப்படும் யுரேனியத்தைச் செறிவூட்டும் நடவடிக்கை தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச்சபை 30 நாள் காலக்கெடு விதித்திருக்கும் நிலையில் பராடியின் இந்தக் கருத்து வெளிவந்துள்ளது.

(ப)

## இந்தியக் கடல் எல்லைக்குள் நுழைந்த இலங்கை மீனவர்கள் 9பேர் கைது!

சென்னை,ஏப்.3

இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த இலங்கை மீனவர்கள் ஒன்பதுபேர் கடலோரப் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

வெள்ளிக்கிழமை இரவு நாகபட்டினம் கடற்பகுதியில் இரு படகுகளில் பிரவேசித்த சமயம் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் தீவிரவாதிகள் அச்சுறுத்தல் காரணமாக கடலோர பாதுகாப்பு படையினர் எல்லைப் பகுதியில் தீவிர பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். கடலோரப் பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், வெள்ளிக்கிழமை இயவு சென்னைத் துறைமுக கடலோரப் பாதுகாப்புப் படையினர் சாரங் என்ற கப்பலில் நாகப்பட்டினத்தில் இருந்து நூறு கிலோ மீற்றர் தொலைவில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தவேளை இந்திய எல்லைக்குள் இரண்டு படகுகள் அத்துமீறி நுழைந்துள்ளன. இதையடுத்து, அந்த விசைப்படகை சுற்றி வளைத்தனர். விசாரணையில், அவர்கள் இலங்கை நாட்டைச் சேர்ந்த அலெக்சீதா என்ற கப்பலில் சாமன்டா (32), புத்திகா (28), அகிலா (24), எராடா (28) என்ற நான்கு பேரும், சீலோன் என்ற கப்பலில் ஜெயசந் திரா (45), திலீப்குமார் (32), பன்துலா (31), சாம்சன் (33), மகேஷ் (37) என்ற ஐந்து பேரும் கடந்த மாதம் 22ஆம் தேதி இலங்கையிலி ருந்து புறப்பட்டனர் என்பது தெரிந்தது. பல நாள்கள் மீன்பிடித்து வந்தவர்கள் திசை மாறி தமிழக எல்லைக்குள் நுழைந்துவிட்டதாகக் கூறியுள்ளனர். படகில் நானூறு கிலோவுக்கும் மேற்பட்ட மீன்கள் இருந்துள்ளன.

இவர்கள் திசை மாறி எல்லைக்குள் நுழைந்து விட்டார்களா? அல்லது ஏதேனும் நாசவேலை செய்ய ஊடுருவி உள்ளார்களா என்ற சந்தேகத்தில் கடலோரப் பாதுகாப்புப் படையினர் இரண்டு விசைப் படகுகளையும் பறிமுதல் செய்து, ஒன்பது பேரையும் பிடித்து மறுநாள் விடியற்காலை சென்னை துறைமுகத்திற்கு வந்தடைந்தனர். இங்கு இந்தியக் குடியுரிமை அதிகாரிகள், கடலோரப் பாதுகாப்புப் படையினர், மீன்வளத் துறை ஊயரதிகாரிகள், துறைமுக உதவி கமிஷனர் கிருஷ்ணமூர்த்தி, துறைமுக இன்ஸ்பெக்டர் ரவிசங்கர் உள்ளிட்ட அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர். பின்னர் பிடிபட்ட இலங்கை மீனவர்கள் ஒன்பது பேரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

(ஐ)(33)

## விண்வெளியில் ஈமச்சடங்கு: சீனர்கள் இப்போதே பெயர் பதிவு

விண்வெளியில் ஈமச்சடங்கு செய்ய முடியுமா? ஏன் முடியாது. இந்த வகையில் சீன நிறுவனம் ஒன்று, மக்களுக்கு வித்தியாசமான விளம்பரத்தை அறிவித்துள்ளது.

இதைப் பார்த்து இதுவரை 50 பேர், தாங்கள் இறந்தபின்னர், தங்களுக்கு இறுதிச்சடங்கை விண்வெளியில் செய்ய வேண்டும் என்று, உயிருடன் இருக்கும் போதே பதிவு செய்துள்ளனர்.

சீனாவின் தலைநர் பீஜிங்கில், சைனிஸ் டிசென்ட் ப்யூனரல்ஸ் சர்வீசஸ் என்ற நிறுவனம் உள்ளது. இது கடந்த பெப்ரவரி மாதம் தான் அமைக்கப்பட்டது. இது சாதாரணமாக இயங்கும் இறுதிச்சடங்கு சேவைக்கான நிறுவனம் அல்ல.

ஆனால், இந்த சீன நிறுவனம் செய்யும் பணியே தனி. 'உங்கள் ஈமச்சடங்கை விண்வெளியில் வைக்க வேண்டுமா? அப்படியானால், இப்போதே பதிவு செய்யுங்கள் என்று அறிவித்தது. இதை பார்த்த 50 சீனர்கள் பதிவு செய்துகொண்டனர்.

விண்வெளியில் ஈமச்சடங்கு என்றால், இங்கிருந்து ஆள்களை அனுப்பி செய்வர் என்று எல்லாம் கற்பனை பண்ணாதீர்கள். இறந்தவுடன், குடும்பத்தார் சாதாரணமாக செய்வது போல, முறைப்படி அடக்கம் செய்து விடுவர். ஆனால், இறந்தவருக்கு பிடித்தமான பொருளையோ, புகைப்படத்தையோ, அவர் தலைமுடியையோ அவர் நினைவாக ஏதாவது ஒன்றை, சிறிய பெட்டியில் போட்டு தர வேண்டும். அதை இந்நிறுவனம், புவிஈர்ப்பு மண்டலத்தை தாண்டி அண்டவெளியில் விட்டுவிடும்.

இறந்தவருக்கு ஈமச்சடங்கு செய்வதற்கு ஈடாகும் என்கிறது நிறுவனம்.

இந்தச் சேவைக்கு லட்சக்கணக்கில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சீனர்களிடம் பெரிய அளவில் இது இன்னும் மவுசு பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈமச்சடங்குப் பொருள்களை விண்ணுக்கு எடுத்துச்செல்ல விண்வெளி ஓடம் பயன்படுத்தப்படும்.

(ஐ)(33)

## தேர்தலில் நடிகை சிம்ரன் அ.தி.மு.கவுக்கே ஆதரவு



சென்னை,ஏப்.3

தேர்தல் பிரசாரத்துக்காக விழுப்புரத்தில் தங்கியுள்ள அ.தி.மு.க. பொதுச் செயலரும் முதல்வருமான ஜெயலலிதாவை நடிகை சிம்ரன் சந்தித்துப் பேசியுள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணிக்கு சிம்ரன் ஆதரவு தெரிவித்தார் என்று அ.தி.மு.க. அறிவித்துள்ளது.

முதல்வர் ஜெயலலிதாவை நடன இயக்குநர் ரகுராம், அவரது மனைவி கிரிஜா ரகுராம், நடிகை சிம்ரன், அவரது கணவர் தீபக் ஆகியோர் சனிக்கிழமை சந்தித்துப் பேசினர்.

எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணிக்குத் தங்களுடைய முழு ஆதரவை அப்போது தெரிவித்துக் கொண் டனர். இதனை முதல்வர் ஜெயலலிதா மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்- என்று அ.தி.மு.க. விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ) (27)

### உலக அரங்கில்

## அமெரிக்கப் பெண் பத்திரிகையாளர் விடுதலை

பக்தாத், ஏப்.3

சில மாதங்களுக்கு முன் ஈராக்கிய தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டிருந்த அமெரிக்க பத்திரிகையார் ஜில்கரோல் என்ற பெண் பத்திரிகையாளர் விடுதலை செய்யப்ட்டுள்ளார்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் கடத்திச் செல்லப்பட்டு பணயம் வைக்கப்பட்டிருந்த ஜில்கரோல் கடந்த வியாழனன்று விடுவிக்கப்பட்டார்.

கடத்தியவர்கள் தம்மை மிக நன்றாகவே நடத்தினார்கள் என்று கரோல் கூறியுள்ளார். இஸ்ரமிலியப் பெண்களைப் போல் உடை அணிந்திருந்த ஜில்கரோல் தீவிரவாதிகள் நீதிக்காகப் போராடுகிறார்கள் என்று கூறியுள்ளர்.

போஸ்டனிலிருந்து வெளியாகும் கிறிஸ்டியன் மொனிட்டர் என்ற பத்திரிகையின் பத்திரிகையாளராவர் இவர்.

(ப)

## ENGLISH SEMINAR UNDER THE AUSPICES OF THE LIONS

With a view to providing a clear insight into some problem areas that confront an average teacher of English, the Lions Clubs of Kopay and Atchuvely in association with the National College of Education Jaffna. sponsor an English seminar which is to be held on the 5 th April 2006 from 8.30 am to 4.30 pm at the National College of Education Jaffna.

Heads of Department of English and a senior lecturer in English from three seats of higher learning in the peninsula, a literary man of repute of the time and the President and five other Teacher - Educators from the National College of Eduacation will make the day productive and eventful by their incisive comments on the current develoments in teaching English as a second language.

Lion S.Yogasingham
District Chairperson
(Education and Career guidance)

(48913)(26)


# ஞானம் பிறிண்டேஸ்
## புதிய கிளை திறப்பு விழா

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி
இல.37, கந்தர்மடச் சந்தியில் தனது கிளை ஸ்தாபனத்தை
திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறது.

காலம் : இன்று(03.04.2006) திங்கட்கிழமை
நண்பகல் 12 மணி.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ஞானம் பிறிண்டேஸ், கைதடி.
க.சிவஞானம், (உரிமையாளர்).
(48908)(30.11.26)



### கொழும்பில் வேலைவாய்ப்பு

தச்சுவேலை நன்றாகத் தெரிந்தவர்கள், ஓரளவு தெரிந்தவர்கள் தேவை. தொடர்பு கொண்டு நேரில் வரவும்.
கண்ணன், 219/1/ A, காலி வீதி,
தெஹிவளை.
தொ.பே.0776655931
(சி/48671)(26.11)


## முழங்காவில் ம.வி அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

கிளிநொச்சி,ஏப்.3

கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த முழங்காவில் மகாவித்தியாலயத்தில் வெற்றிடமாக உள்ள அதிபர் பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் II அல்லது III ஐச் சேர்ந்தவர்கள், இலங்கை அதிபர் சேவை வகுப்பு I அல்லது வகுப்பு 2:1 ஐச் சேர்ந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்களை எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன்னர் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)(26)

## புராண படனப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.3

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான புராணபடனப் போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். வண்ணை. நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

10ஆம் வகுப்பு முதல் 13 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் கலந்துகொள்ளும் இந்தப் போட்டி ஆண்களுக்கு தனியாகவும், பெண்களுக்குத் தனியாகவும் நடத்தப்படும் என்று சங்கத்தின் செயலாளர் கலாபூஷணம் சு.செல்லத்துரை இது பற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். (எ-135)(26)

## இசை இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிகவின் கலைமன்றத்தின் தீம்தீம் எனும் இசை இறுவட்டு வெளியீட்டுவிழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செல்வன் ச.செந்தில்குமரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சட்டத்தரணி 'கலாபூஷணம்' டபிள்யூ எஸ்.செந்தில்நாதன் பிரதம விருந்தினராகக் கலந்து இறுவட்டை வெளியிட்டுவைப்பார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் ஆறு.திருமுருகன் வெளியீட்டுரையையும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஆ.இரவீந்திரன் நயப்புரையையும் நிகழ்த்துவர்.

(3)(26)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 19 - 04 - 1924
மறைவு 17 - 03 - 2006

அமரர்
### செல்லையா இரத்தினசிங்கம்
(அப்பையா)

சீர்மேவும் சுதுமலையூர் பெற்றெடுத்த தவச்செல்வா!
சிறப்புடைய நன்மக்கள் போற்ற வாழ்ந்தீர்!
பார்போற்றும் நல்லறங்கள் பற்பல செய்தே
பண்பாளா! பசித்தோர் துயர்துடைத்தீர் நும்மனைவி
கார்பெற்ற கூந்தல் கனகாம்பிகை மக்கள்
மருமக்கள் பேரர் உறவு மற்றுமுள்ளோர் கலங்க
நீர்மோட்ச வாழ்வு தேடியே போனதேனோ?
நும்பிரிவாற் துயருற்றே வருந்துகிறோம் நாமிங்கு.

சுதுமலை கிழக்கு,
மானிப்பாய். (48912)(26.17)
-குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி தங்கமயில் (கிளாக் ஐயா- சிவராசா)
(முன்னாள் லிகிதர் Rajah Corporation)

உடுப்பிட்டி, இமையாணன், சந்தை வீதியைப் பிறப்பிடமாகவும் கிராமக்கோடு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தங்கமயில் (சிவராசா) அவர்கள் 01-04-2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் துரைச்சாமி-மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் ராணியின் பாசமிகு கணவரும் சுதாகர் (சுவிஸ்), அமரர் சுகிர்தா, வனிதா, பிருந்தா, பாஸ்கர் (லண்டன்), பிரபாகர்(லண்டன்),ஸ்ரீதர் ஆகியோரின் அன்புத் தந்தையும் தவமணி, தங்கவேல், தவமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சாந்தகுமாரன், பிரகலாதன், வினோதினி (சுவிஸ்), ரிசாந்தினி(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் சுகிர்ஷன் (சுவிஸ்), பிரியங்கா, ரோபிகா, டோனிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-04-2006) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3 மணியளவில் பூதவுடல் உடுப்பிட்டி, வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கிராமக்கோட்டடி, பருத்தித்துறை,
தொ.பே.077 6627126, 0773068873,0776502952
(48909)(26.17)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், குடும்பத்தினர்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
கன்னி
768 சிவப்பு
31-03-2006
செல்லுபடியாகும் தொடர் இல. 5101730-5109636

வெற்றி இலக்கங்கள் **03 07 18 48**

**ஜக்பொட் பரிசு ரூபா 17,14,250/- வெல்லப்படவில்லை**

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 42,13,060/-
தொடர் இல. 4189303 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கெட்டுக்கள் 2006 ஏப்ரல் 04 ஆம் திகதி செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 1,67,750 | 10/- | 16,77,500/- |
| 2 இலக்கங்கள் | 15,415 | 20/- | 3,08,300/- |
| 1 இல+லக்கினம் | 15,157 | 30/- | 454,710/- |
| 2 இல+லக்கினம் | 1,413 | 100/- | 1,41,300/- |
| 3 இலக்கங்கள் | 408 | 500/- | 2,04,000/- |
| 3 இல+லக்கினம் | 35 | 5,000/- | 1,75,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 1,00,000/- | 2,00,000/- |
| 4 இல+லக்கினம் | - | 17,14,250/- | - |
| மொத்தம் | | | 31,60,810/- |
| முச்சக்கர வண்டிகள் | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 2,00,185 | | 42,13,060/- |

**இந்த செவ்வாய்க்கிழமை ரூபா 20,88,850/-**

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| களுத்துறை | 5105768-8-29 |
| கேகாலை | 5103269-8-29 |
| மொனராகலை | 5107922-0-63 |
| அனுராதபுரம் | 5106888-1-91 |
| புத்தளம் | 5109128-0-13 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03

## சனிதா

சீட்டிழுப்பு இல. 1698

01.04.2006 ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்
**03 04 08 69 08**

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 301003790 இலிருந்து 301016726
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 27,83,000/-வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 27,83,000/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 19 | 5,000/- | 95,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 341 | 1,000/- | 3,41,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,110 | 500/- | 5,55,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 16,749 | 40/- | 6,69,960/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 15,830 | 20/- | 3,16,600/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,37,845 | 10/- | 23,78,450/- |
| மொத்தம் | | | 53,56,010/- |
| [illegible] | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 2,71,900 | | 59,56,010/- |

[illegible]

**இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 34,18,650/-**

[illegible]

| | |
|---|---|
| [illegible] | 301097475-7-61 |
| [illegible] | 301095693-7-79 |
| [illegible] | 301016098-4-45 |
| [illegible] | 301087097-6-61 |
| [illegible] | 301095396-0-21 |

அபிவிருத்தி லொத்தர் சபை
[illegible]

# புதுக்கடை திறப்பு விழா அழைப்பு

யாழ். வீதியில் அமைந்துள்ள

## சிவா ரெயிலர் சென்ரர்

இன்று (03.04.2006) திங்கட்கிழமை மு.ப. 11 மணிமுதல் 12 மணிக்கு இடையிலான சுபநேரத்தில் சோதி வேம்படி வீதி, மானிப்பாயில் அவர்களது புதிய கிளையை திறப்பதற்கு பெரியோர் நிச்சயித் திருப்பதால் நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையா ளர்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக் குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(48915)
(30-34-49)

- உரிமையாளர்.



## மென்பந்து துடுப்பாட்டப் போட்டி

அணிக்கு 9 பேர் பங்குபற்றும் 10 பந்து பரிமாற்றங்கள் கொண்ட போட்டி.

விண்ணப்ப முடிவு : 08.04.2006

போட்டி ஆரம்பம் : 11.04.2006

விடுமுறை, சனி, ஞாயிறு நாள்களில் போட்டிகள் நடைபெறும்.

விண்ணப்படிவம் கிடைக்கும் இடங்கள்

- புதிய யூனிவேசல் அக்கடமி - யாழ். இந்து மகளிர் கல்லூரி அருகில்.
- ஹரிகா தையலகம் - ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
- K.T.M. ஒயில் மில் & கூல் ஸ்பொட் - கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

(48917) (30)

ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம்
கலாசாலை வீதி, பாரதிபுலம், திருநெல்வேலி.



## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் 70 ஆண்டுகள் சேவை பூர்த்தி விழா

தலைவர்: திரு வி.வேலுப்பிள்ளை அவர்கள்
(ஒய்வுபெற்ற பிரதம மின் பொறியியலாளர், இ.மி.ச.)

இடம் : மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை அதிகார சபை மண்டபம்.
காலம் : 04.04.2006 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணி.

வாழ்த்துரை வழங்குவோர்.

- திரு கே.கணேஸ் - யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்
- வைத்திய கலாநிதி - ஏ.கேதீஸ்வரன் - சுகாதார சேவைப்பிரதிப் பணிப்பாளர் யாழ். மாவாட்டம்.
- திரு சீ.ஏ.மோகன்ராஜ் - பிரதேச செயலர், வலி.மேற்கு, சங்கானை.
- திரு ரீ.விக்கினராஜா - மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்.
- திரு கே.பி.வரதராஜா - இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதிபதி.
- திரு பி.சிவலிங்கம் - உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளார்.
- திரு எஸ்.கனகசபாபதி - முன்னாள் கூ.அ.உ.ஆணையாளார், யாழ்.
- வைத்திய கலாநிதி கே.சுரேஸ்குமார்.
- வைத்திய கலாநிதி எஸ்.மனோகரன் (இருதய சிகிச்சை நிபுணர்)
- வைத்திய கலாநிதி சிவன்சுதன் (வைத்திய ஆலோசகர்)
- வைத்திய கலாநிதி எஸ்.குகதாசன் (கண் சிகிச்சை நிபுணர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கூட்டுறவு வைத்தியசாலை,
மூளாய். (அ-48673) (30-34-49)

தலைவர்,
பணிப்பாளர் சபையினர், ஊழியர்கள்.


## கண்ணீர் அஞ்சலி



எமது சக பணியாளர்
திருமதி கு.ஸ்ரீதேவி
அவர்களின் அன்புத் தாய்
திருமதி இராசா பாக்கியம்
அவர்கள்
இறைபதம் எய்திய
செய்திகேட்டு ஆழ்ந்த
துயரடைகின்றோம்.

சக பணியாளர்கள்
- உதயன் பணிமனை.


## UNIVAC
### Software Engineering Park

MICROSOFT CERTIFY AND DIPLOMA COURSES

| | |
|---|---|
| MCSD - Microsoft Certify Solution Developer | Duration: 6 Months |
| Software Development using Visual Basic,SQL & Oracle | Duration: 2 Months |
| Software Development using Visual Basic.Net & Ado.net | Duration: 2 Months |
| Diploma in Computing and Information System (UOL) | Duration: 1 Year |

UNIVERSITY OF LONDON - DEGREES

1. BSc Software Engineering - 3 years.( Final year study in UK)
2. BSc Computing and Information System - 3 Years ,,
3. MSc Advance Software Engineering - 18 Months

START ON 10.04.2006

(This University Examination in Colombo British Council)

213, Kasthuriyar Road, Jaffna T.P:077 6176476


## சமயச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஏப்.3

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத் தில் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோச கர் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் விநா யகமகத்துவம் எனும் தலைப்பில் சொற் பொழிவாற்றுவார். (ஓ-13)

## மிருதங்க இலவசப் பயிற்சி

தென்மராட்சி,ஏப்.3

நுணாவில் கிழக்கு, சர்வசாதன சங்க சன சமூக நிலையத்தினர் பாடசாலை மாண வர்களுக்கான இலவச மிருதங்க பயிற்சி வகுப்பை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

இந்து சமய கலாசார திணைக்களத்தின் அனுசரணையுடன் இப் பயிற்சி வகுப்பு நடத் தப்படவுள்ளது.

இப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் மேற்படி நிலையத் தில் தமது பெயர் விவரங்களைப் பதிவு செய் யுமாறு நிலையத் தலைவர் க.மோகனராஜ லிங்கம் அறிவித்துள்ளார்.

(ஓ-117)

## கொடிகாமம் அஞ்சலகத்தில் தந்தி சேவகர் நியமனம்

தென்மராட்சி கிழக்கு,ஏப்.3

கொடிகாமம் அஞ்சலகத்தில் நீண்ட காலத்தின் பின்னர் தந்திச் சேவகர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். கடந்த 15 வருடங் களுக்கும் மேலாக இப்பதவி நிரப்பப்படா மல் வெற்றிடமாக இருந்துவந்தது. அச்சம யம் தந்திச் செய்திகள் யாவும் தபால் விநி யோகிப்போர் மூலமே வழங்கப்பட்டது. தற் சமயம் இக்காரியாலயத்துக்கு தொலைபேசி வசதி வழங்கப்பட்டு இவ்வெற்றிடம் நிரப் பப்பட்டதன் மூலம் நாளாந்தம் கிடைக்கும் தந்திச் செய்திகள் யாவும் உடனுக்குடன் உரி யவர்களிடம் சேர்ப்பிக்கப்படுவதாக அஞ் சலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-122)

## மின்மானியின்றி பாவனையாளர் சிரமம்

தென்மராட்சி கிழக்கு,ஏப்.3

வரணிப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப் பட்டு பல மாதங்கள் கடந்த நிலையிலும் பல இணைப்புகளுக்கு மின்மானி பொருத்தப் படவில்லை.இதனால் கூடுதலான கட்டணம் செலுத்த வேண்டியுள்ளதாக பாவனை யாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். மின் மானி பொருத்தும் நடவடிக்கையை மின்சார சபையினர் விரைவுபடுத்த வேண்டும் என் றும் அவர்கள் கோரிவருகின்றனர். (ஓ-122)

## தவறிவிட்டது

முக்கிய ஆவணங்களும் மற்றும் பொருள் களும் அடங்கிய கறுப்பு நிற **Bag** முகமா லையில் 30.03.2006 மாலை தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

T.ஜெயபாலா,
சித்தன்கேணி எரிபொருள் நிரப்பு நிலையம்.
T.P.: 077 9506880


## ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த

### மெர்க்குரிப் பூக்கள்

காட்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது
10.30, 2.30, 6.30, 9.00, (பு.நே.) சீக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

## நாகம்ஸ் சுன்னாகம்

பிரபு, முரளி, வினித் நடித்த
கலைஞரின்

### பாசக்கிளிகள்

காட்சி நேரம்; 11.00, 3.00, 7.00

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

நந்தா, தேஜாசிறி, மணிவண்ணன் மற்றும்
பலர் நடித்த

### கோடம்பாக்கம்

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
தினசரி நான்கு காட்சிகள்


# மரண அறிவித்தல்கள்

## விநாயகமூர்த்தி கிருபாமூர்த்தி கிருபாமூர்த்தி வசந்தரூபன்





சரவணையைப் பிறப்பிடமாகவும் ஜேர் மனியை வசிப்பிட மாகவும் கொண்ட விநா யகமூர்த்தி கிருபா மூர்த்தி 31.03.2006 வெள்ளிக்கிழமையும் கிருபாமூர்த்தி வசந்த ரூபன் 28.03.2006 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் அகாலமரணமானார்கள்.

அன்னார்கள் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி - கனகம்மா தம் பதியரின் அன்பு மகனும், பேரனும், அனலைதீவைச் சேர்ந்த திரு ஞானம் - கமலம் தம்பதியரின் மருமகனும், பேரனும் யோகமல ரின் அன்புக் கணவரும், மகனும், நிசாந்தினி, சஷானா, சவீனா ஆகியோரின் அன்புத் தந்தையும், சகோதரனும் இராஜமூர்த்தி (பிரான்ஸ்), காலஞ்சென்ற தற்பராமூர்த்தி (தாவடி) ஆகியோரின் சகோதரனும், பெறாமகனும் திருமணச் செல்வி, பங்கையச் செல்வி, தனேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், மருமகனும் தனலட்சுமி (பிரான்ஸ்), கருணாவதி ஆகியோரின் மைத்துனரும், பெறா மகனும் மகாதேவன், தற்பரானந்தன், வேலழகன் ஆகியோரின் மைத்துனரும், மருமகனும் ஆவார்கள்.

இவர்கள் இருவரினதும் இறுதிக்கிரியைகள் 05.04.2006 புதன் கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
தாவடி தெற்கு, தாவடி. (48911) (30-34-49)

தகவல்:
ந.கருணாவதி.

## சலமோன் அந்தோனிப்பிள்ளை



(ஓய்வுபெற்ற யாழ். போதனாவைத்தியசாலை ஊழியர்)

இல.58, கோயில் வீதி, யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த சலமோன் அந்தோனிப்பிள்ளை அவர்கள் நேற்று (02.04.2006) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சல மோன் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மக னும் அந்தோனிப்பிள்ளை -மரியம்மா தம்பதி யரின் அன்பு மருமகனும் வில்லியின் அன்புக் கணவரும் கனிலா (ஹொலண்ட்), மாலினி (பிரான்ஸ்), அன்றுறோசியன் (சூரி-லண் டன்), கீதா (யாழ்ப்பாணம்), அன்றுயூட் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தனபாலசிங்கம் (ஹொலண்ட்), அன்ரன் (பிரான்ஸ்), சபீனா (லண்டன்), ரமேஷ் (யாழ்ப்பாணம்), ரூபி (லண்டன்) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற பிரான்ஸிஸ் மற்றும் திரேசம்மா ஆகியோரின் சகோதரனும் நிபோன், றோவின், ஹரின், மாலதி, மரீனா, மார்டினா (பிரான்ஸ்), வெறின், டெவற்றா (லண்டன்), தறுட்சன், எறுட்சன், தீபிகா (யாழ்ப்பாணம்), மிதுசன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.04.2006) திங்கட்கிழமை பி.ப. 4 மணிக்கு இல. 58, கோயில் வீதியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித திரே சம்மாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.58, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 9361 (48922) (30-34-49)

தகவல்:
லில்லி (மனைவி),
ரமேஷ் (மருமகன்).

## அம்பலவாணர் தம்பையா கணபதிப்பிள்ளை

புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மாகி யப்பிட்டியை வசிப்பிடமாகவும் தற்போது நெலுக்குளம் வவுனியா வில் வசித்தவருமாகிய அம்பலவாணர் தம்பையா கணபதிப் பிள்ளை (கந்தையா - ஆச்சாரியார்) அவர்கள் 31.03.2006 வெள் ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பூமணியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.04.2006) செவ்வாய்க் கிழமை மு.ப. 10 மணியளவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெலுக்குளம்,
வவுனியா.
(48923)
(30-34-49)

தகவல்:
க.சிவகுமாரன் (மகன்-குமார்-பிரான்ஸ்),
பூமணி (மனைவி).

## கனகசபை இரத்தினவேலு
(சங்கானை)

மாதனை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், சங்கா னையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை இரத்தினவேலு (ஓய்வுபெற்ற தட்டெழுத்தாளரும், பகுதிநேர ஆங்கில ஆசிரிய ரும்) அவர்கள் கடந்த 30.03.2006 வியாழக்கிழமை காலமா னார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.03.2006 வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
சங்கானை. (48919) (30-34-49)

தகவல்:
மனைவி, மக்கள்.


HERITAGE SARONGS ACCURATE 007 ACCURATE LUNGHI COMPANY

THE PRIDE OF TODAY'S STYLE JAGUAR 009 ACCURATE LUNGHI COMPANY

Sole Agents in Sri lanka

## புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி

30% வரை

April 1 முதல் 14 வரை

SAREES & SALWARS



## OCEANICK IMPEX

192, Main Street, Colombo 11. Tel: 2336720, Whole Sale : 2384131. Fax:2326961

# அபூர்வமுகத்துடன் ஆட்டுக்குட்டி

குப்பிளான் பகுதியில் வெள்ளாடு ஒன்று மனித முகத்தை ஒத்த முகஅமைப்புடனான குட்டி ஒன்றை ஈன்றுள்ளது. நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இந்த அபூர்வ ஆட்டுக்குட்டியை தாயாடு ஈன்றெடுத்தது.

அபூர்வமுக உடல் அமைப்புடன் காணப்படும் இந்த ஆட்டுக்குட்டியைப் பற்றி கேள்வியுற்ற பெருந்தொகையான மக்கள் அக்குட்டியை நேரில் சென்று பார்வையிட்டனர்.

குப்பிளான் தெற்கு ஞானவைரவர் கோயிலுக்கு அருகில் உள்ள வீடொன்றில் வசித்து வரும் அரியமுத்து பாலச்சந்திரன் என்பவர் வளர்த்து வந்த வெள்ளாடு ஒன்றே இவ் அபூர்வ ஆட்டுக்குட்டியை ஈன்றது.

இக்குட்டி தாயாட்டினால ஈன்றெடுக்கப்பட்டு சில மணித்தியால ..ங்கள் மட்டும் உயிருடன் காணப்பட்டது என்றும் பின்னர் அது இறந்து விட்டதாகவும் கூறப்படுகிறது. (ஓ)

## முக்கிய பாதாள உலகப் புள்ளியான

# ‘ஆமி மல்லி’யும் சகாவும் அதிகாலை சுட்டுக்கொலை!

## பொலீஸ் கைதின் பின் சம்பவம்

காலி, ஏப்.3

பாதாள உலகக் கோஷ்டியின் பிரபல புள்ளியாகக் கருதப்பட்டு, நீண்ட காலம் தலைமறைவாகியிருந்த 'ஆமி மல்லி' எனும் நபரும், அவனது சகாவொருவரும் நேற்று அதிகாலை சுட்டுக்கொல்லப்பட்டனர்.

பேலியகொடை விசேட பொலீஸ் பிரிவினரால் நேற்றுமாலை 'ஆமி மல்லி' கைது செய்யப்பட்டார். பின்னர் தனது சகாக்கள் பலர் ஹபராதுவ பகுதியில் தங்கியிருக்கிறார்கள் எனவும், அவர்கள் இருக்கும் இடத்தைத் தன்னால் காண்பிக்க முடியுமென்றும் 'ஆமி மல்லி' பொலீஸாரிடம் தெரிவித்தாராம்.

இதனையடுத்து 'ஆமி மல்லி' ஹபராதுவ கூட்டிச்செல்லப்பட்டார். அங்கு தனது சகாக்கள் இருக்கும் இடத்திற்கு அவர் பொலீஸாருடன் சென்றபோது பொலீஸார் மீது இனந்தெரியாத கோஷ்டியொன்று திடீரெனத் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டது எனக் கூறப்பட்டது. பதிலுக்குப் பொலீஸாரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் 'ஆமி ம[illegible]ம் அவரது சகா ஒருவரும் அதே [illegible] உயிரிழந்தனர். பொலீஸார் மீது து[illegible]கிப் பிரயோகம் செய்த கோஷ்டி தப்பிச் சென்றுவிட்டது என்று கூறப்பட்டது.

இந்தத் துப்பாக்கிச் சமரில் பொலீஸாருக்கு எதுவித காயங்களும் ஏற்படவில்லை. சம்பவ இடத்திலிருந்த ரி. 56 ரகத் துப்பாக்கிகள் இரண்டும், கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கும் ஹபராதுவ பொலீஸார், தப்பியோடிய சந்தேக நபர்கள் குறித்து விசாரணைகளை நடத்திவருகின்றனர் என்றும் கூறப்பட்டது. (க)

# தபால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச தொழிற்சங்கங்களும் இணையும் என்று அவை நம்பிக்கை வெளியிட்டன.

அதேவேளை, இப்பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டுவரும் ஊழியர்கள் இன்று காலை 9.30 மணியளவில் கொழும்பு விஹாரமகாதேவி பூங்கா முன்றிலில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றையும் மேற்கொள்ளவுள்ளனர்

திஸ்ஸதேவேந்திர ஆணைக்குழுவின் சம்பள உயர்வு சிபாரிசு உயரதிகாரிகளுக்குச் சாதகமாகவும், சாதாரண ஊழியர்களுக்கு பாதகமாகவும் இருப்பதாகத் தெரிவித்து அதை ஆட்சேபித்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுவதாக மேற்படி தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன. (க)

# தமிழ் மாணவரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் இருவர் 'மற்றும் உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவி உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவரைக் கைது செய்துள்ளனர். படையினரின் இச்செயலானது மீண்டும் மீண்டும் தமிழ் மாணவரைச் சீண்டிப் பார்க்கும் செயலாகவே நாம் கருதுகிறோம். விரைவில் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ.உயர் தரப்பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றும் மாணவன் ஒருவன் கைதுசெய்யப்பட்டமையானது தமிழ் மாணவரின் கல்வி நடவடிக்கையை குழப்பும் படையினரின் செயலாகவே நாம் கருதுகிறோம்.

ஏற்கனவே பாடசாலைகளை சுற்றி முள்வேலி அமைத்து ஆயுதங்களுடன் நடமாடும் படையினர் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு மாணவர்களைக் கைதுசெய்வதன் மூலம் தமிழ் மாணவர்களை [illegible] ரீதியான பாதிப்புக்குள்ளாக்குகின் [illegible] உடன்நிறுத்தப்பட்டு [illegible] அனைவரும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். - இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)(22)

# மாணவர், பெண்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துகொண்டு சென்றனர். ஆயு தங்களை மறைத்து வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கூறப்பட்டது.

இந்த ஏழு பேரில் வீட்டு உரிமையாளரான செல்வராசா கிருஷ்ணராஜா (வயது 44), அவரது மனைவி கிருஷ்ணராஜா கலாவதி (வயது 39), அவர்களது பிள்ளைகளான கி.சுதாகர் (வயது 21), கி.ரஞ்சினி (வயது 20), கி.திவாகர் (வயது 18) ஆகியோர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்களில், ரஞ்சினி திருநெல்வேலியில் உள்ள உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்வி பயில்கின்றார். சுதாகர் மற்றும் திவாகர் ஹாட்லிக் கல்லூரி மாணவர்களாவர்.

அத்துடன், அந்த வீட்டில் தங்கியிருந்த மற்றுமிரு இளைஞர்களையும் படையினர் விசாரணைக்கு அழைத்துச் சென்றுள்ளனர் எனக் கூறப்பட்டது. இதற்கிடையில் அந்த வீட்டில் இருந்து மோட்டார் சைக்கிள் ஒன்று மற்றும் சில பொருள்களையும் படையினர் எடுத்துச்சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. கைதுசெய்யப்பட்ட ஏழு பேரும் 52-4 படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் தாயார் கலாவதி மற்றும் மகள் ரஞ்சினி ஆகியோர் நேற்றுமாலை விடுதலை செய்யப்பட்டனர். மற்றவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஓ-எ-3-70)(22)

# ஐ.தே.கவின் முக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கி ரமசிங்க இந்தியாவிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுமாலை புறப்பட ஏற்பாடாகியிருந்த நிலையில் நேற்றுப் பிற்பகல் இந்தக் கடிதம் மஹிந்த விஜயசேகர எம்.பி க்கு அனுப்பப்பட்டுள்ளது. கட்சித் தலைவருக்குரிய அதிகாரத்தைக் கொண்டு இந்த நடவடிக்கை தலைவரால் எடுக்கப்பட்டுள்ளது என்று மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு என்ற போர்வையில் கட்சித் தலைமைப் பொறுப்பை மாற்றும் இரகசிய செயற்பாடுகளில் மஹிந்த விஜயசேகர உட்பட மேலும் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என ஐ.தே.க. சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் கட்சித் தலைமைக்கு நீண்ட நாள் சுட்டிக்காட்டி வந்தனர்..

இதன் எதிரொலியாகவே மேற்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், ஏனைய இரு உறுப்பினர்கள் தொடர்பிலும் இதுபோன்ற நடவடிக்கை எடுக்கப்படக் கூடுமென்றும் ஐ.தே.கவின் உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. இதற்கிடையில் ஐ.தே.க. தலைவரினால் மஹிந்த விஜயசேகர எம்.பிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் மாத்தறை மாவட்ட அமைப்பாளர் பதவி, செயற்குழு உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டமைக்கான காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.தே. கட்சித் தலைவர் இந்தியாவுக்கு விஜயம் செய்யும் சமயத்தில், அவர் நாட்டில் இல்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அவருக்கெதிரான திரைமறைவுச் சதி நடவடிக்கையொன்றை மேற்கொள்ள கட்சிக்குள் சிலர் திட்டமிட்டிருந்தனர் என்றும், அதன் எதிரொலியாகவே இந்த நடவடிக்கை இடம்பெற்றிருக்கக் கூடுமென்றும் மற்றுமொரு தகவல் தெரிவித்தது. (க)

# கிளிநொச்சி ஆங்கிலக் கல்லூரிக்கு விண்ணப்பிப்போருக்கு

கிளிநொச்சி,ஏப்.3

கிளிநொச்சி ஆங்கில மொழிக் கல்லூரியின் புதிய கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் ஐந்தாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கற்கை நெறிதொடர்பாக நேற்றைய உதயனின் 11ஆம் பக்கத்தில் செய்தி வெளியானது. அதில் விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி எதிர்வரும் 25ஆம் திகதி எனப் பிரசுரமாகியிருந்தமை தவறானதாகும். (ஓ)

# உடனடியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து ஜனாதிபதியின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

பாகிஸ்தானில் தங்கியிருந்த சமயம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இது குறித்துத் தமது அரசின் மூத்த அமைச்சர்களுடன் நெடுநேரம் மந்திராலோசனை நடத்தியிருக்கிறார். இந்த ஆலோசனைகளுக்கமைய பொதுத் தேர்தலொன்று உடனடியாக நடைபெறும் சாத்தியம் அதிகம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலொன்றுக்குச் செல்வது குறித்து ஜே.வி.பி., ஹெல உறுமய தவிர்ந்த தமது நேச அணிகளுடன் ஜனாதிபதி மஹிந்த விரைவில் பேச்சுகளை நடத்துவாரெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (க)

# போவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் எதிர்வரும் வியாழக்கிழமை ஒரு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைவரும் நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் அன்றைய தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவைச்சந்தித்துப் பேசும் போது போவரும் உடனிருப்பாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியாவிற்குச் செல்லும் எரிக் சொல்ஹெய்ம், ஹன்ஸன் போவர் ஆகியோர் புதுடில்லியில் இந்திய வெளியுறவுத்துறை முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேசிய பின்னர் நாடு திரும்பும் வழியில் லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பால சிங்கத்தை சந்தித்து கொழும்புப் பேச்சுகளின் பெறுபேறுகளை விளக்கவுள்ளனர். (க)

Fast Track Courses
வகுப்புக்கள் இன்று ஆரம்பம்
10am & 6pm
AIMS

# முறுகும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் போக்கால் முறுகும் புதுடில்லி அரசை சமாளித்து, சமரசம் செய்யும் வகையில் விளக்கமொன்றை இந்தியாவிற்கு வழங்க இலங்கை அரசு தீர் மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது. ஜனாதிபதியோடு பாகிஸ்தானுக்கு விஜ யத்தை மேற்கொண்டிருந்த அவரின் சகோ தரரும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோட்டபாய ராஜபக்ஷ பாகிஸ்தான் விஜயம் முடிந்து நாடு திரும்பியதும், இந்தியாவைச் சமாளிப்பதற்காக அங்கு பறக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகின்றது. இந்தப் படகுகளில் இருந்த சமிந்த (வயது-32), புத்திக்க (வயது-28), எரந்த (வயது-28), ஜெயச்சந்திர (வயது-45), திலிப்குமார (வயது-32), பந்துல (வயது-31), சாம்சன் (வயது-33), மகேஷ் (வயது-37), அக்கில (வயது -24) ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

மீன் பிடிப்பதற்காக கடந்த மாதம் 22ஆம் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்ட இவர்கள் பலநாள்களாக மீன்பிடித்த பின்னர் திசைமாறி தமிழகக் கடல் எல்லைக்குள் வந்திருக்கின்றனர் என்பது விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. இவர்களின் படகில் நானூறு கிலோவிற்கும் மேற்பட்ட மீன்கள் இருந்தன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் திசைமாறி தமிழக எல்லைக்குள் நுழைந்தனரா? அல்லது ஏதேனும் நாச வேலை செய்ய ஊடுருவினார்களா என்பது குறித்து சந்தேகம் எழுப்பியுள்ள தமிழகக் கரையோர காவல்துறையினர், மீனவர்களைத் தடுத்து வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர். (க)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கொர்ணலியூஸ் மார்ஷலம்மா

சென் ஜேம்ஸ் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கொர்ணலியூஸ் மார்ஷலம்மா அவர்கள் 31.03.2006 வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சலமோன் - யக்கோவா தம்பதியரின் அன்பு மகளும் ச.கொர்ணலியூஸ் அவர்களின் பாசமிகு மனைவியும், திருமதி யசித்தா, திருமதி லூசியா, பிரான்சிஸ், ஜெயரட்ணம், காலஞ்சென்ற றிச்சாட் ஜேம்ஸ் மற்றும் சாள்ஸ் பேரோ ஆகியோரின் அன்புத் தாயும் அன்ரனிமுத்து, இருதயநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அ.வேதநாயகம், ஞா.எதிர்முகசிங்கம், திருமதி பிறேமாவதி, திருமதி கில்டா, திருமதி ஜெனிற்றா றதினி ஆகியோரின் பாசமிகு மாமியும், தனிநாயகம் (தயான்), டொறின், றில்டா, றூபினஸ் அன்ரனி, யூலியன், கொன்ஸ்ரன்ரைன், அலிசாலேயா, றபேக்காலேயா, கொர்ணலியா, கிளாறா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் நாளை (04.04.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் இறுதி ஆராதனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுப் புனித யாகப்பர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சென்ஜேம்ஸ்,**
**இளவாலை.**
(48925)(30)

**தகவல்:**
**வே.அ.தனிநாயகம் (தயான்)**
(பேரன் - ஜெயாநெற் உரிமையாளர்)

## சின்னத்தம்பி பாலகிருஷ்ணன்



மகாஜனாக் கல்லூரி வீதி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் தற்போது சொர்ணவடலி, பூநாறி வீதி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் அவர்கள் நேற்று (02.04.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் விமலசுந்தரகுமாரி (குமாரி)யின் அன்புத் தந்தையும், புவனேஸ்வரன் (ஓமான்) அவர்களின் அன்பு மாமனும் காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் பாலசுப்பிரமணியம், சபாரத்தினம் (கனடா), கதிரமலை, செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2006) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சொர்ணவடலி,**
**பூநாறி வீதி, கொக்குவில் மேற்கு.** (48897)
தொ.பே.: 077 9060923, 077 6528577.

**தகவல்:**
**சி.இராமச்சந்திரன்**
(சந்திரன் - பொறாமகன்)

## திருமதி சுப்பிரமணியம் பூரணம்



116/4, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, அரியாலையைச் சேர்ந்த திருமதி சுப்பிரமணியம் பூரணம் அவர்கள், நேற்று (02.04.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.04.2006) திங்கட்கிழமை பி.ப. 5 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**116/4, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,** **க.மாணிக்கவாசகர்**
**அரியாலை.** (48927)(30) (மருமகன் - சைக்கிள் கடை உரிமையாளர்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.04.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2006 மே**

வெளியீடு 02

# மாதிரி வினாப்பத்திரம்

## வணிகக்கல்வி

திரு. B.கஜென். B.Com. *(Hons)*.வவுனியா.

## பகுதி I

01. வணிகத்தினால் பிரதான பயன்பெறும் தொகுதியினர்
(1) வியாபாரிகள் (2) அரசு
(3) நுகர்வோர் (4) உற்பத்தியாளர் (5) நிறுவனங்கள்

02. ஆழிப்பேரலையால் பாதிப்படைந்த மக்களுக்கு வீடுகளை நிர்மாணிக்கும் பணி ஒரு,
(1) அரச கைத்தொழில் (2) தனியார் கைத்தொழில்
(3) முதனிலைக் கைத்தொழில் (4) 2ஆம் நிலைக் கைத்தொழில்
(5) 3ஆம் நிலைக் கைத்தொழில்

03. இலங்கையிலுள்ள மொத்த வணிக வங்கிகளின் எண்ணிக்கை,
(1) 22 (2) 15 (3) 11 (4) 24 (5) 10

04. பின்வருவனவற்றுள் உத்தரவு பெற்ற சிறப்பு வங்கியொன்று வாடிக்கையாளருக்கு ஆற்றும் தொழிற்பாடு அல்லாதது,
(1) கால வைப்புக்களை ஏற்றுக்கொள்ளல் (2) குத்தகைக்கு விடுதல்
(3) சேமிப்பு வைப்புகளை ஏற்றுக்கொள்ளல்
(4) வெளிநாட்டுக் கொடுக்கல், வாங்கல்களை மேற்கொள்ளல்
(5) கடன் கொடுத்தல்

05. ஆயுட் காப்புறுதி உட்பட சகல காப்புறுதி வகைகளுக்கும் பிரயோகிக்கப்படத்தக்க காப்புறுதித் தத்துவங்களைக் கொண்ட தொகுதி,
(1) அதி உயர் நம்பிக்கை / பங்களிப்புத் தத்துவம் / காப்புறுத்தும் உரிமை
(2) அதி உயர் நம்பிக்கை/காப்புறுத்தும் உரிமை/மிகக்கிட்டிய காரணத்தத்துவம்
(3) காப்புறுத்தும் உரிமை / பதிலாள் வைப்பு / மிகக்கிட்டிய காரணத்தத்துவம்
(4) அதி உயர் நம்பிக்கை / காப்புறுத்தும் உரிமை / இழப்பீட்டுத் தத்துவம்
(5) காப்புறுத்தும் உரிமை / அதி உயர் நம்பிக்கை / பதிலாள் வைப்பு

06. 2005ஆம் ஆண்டுக்கான ISO 9001 தரச் சான்றிதழைப் பெற்ற காப்புறுதிக் கம்பனி,
(1) ஜனசக்தி (2) யூனியன் அஷூரன்
(3) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
(4) சிலிங்கோ காப்புறுதிக் கம்பனி
(5) ஈகிள் காப்புறுதிக் கம்பனி

07. பின்வருவனவற்றுள் அனுமதிப் பத்திரம் பெற்ற சிறப்பு வங்கி,
(1) மக்கள் வங்கி (2) இலங்கை வங்கி
(3) சம்பத் வங்கி (4) தேசிய சேமிப்பு வங்கி
(5) ஹொங்கொங் அன்ட் ஷங்காய் வங்கி

08. பங்கு வழங்கலுடனோ அன்றேல் பங்கு வழங்கலின்றியோ தாபிக்கக்கூடிய கம்பனி,
(1) வரையறுத்த தனியார் கம்பனி
(2) பல்தேசியக் கம்பனி
(3) அரச கம்பனி
(4) உத்தரவாதத்தால் வரையறுத்த கம்பனி
(5) வரையறுத்த பொதுக்கம்பனி

09. பணத்தின் இன்றியமையாத பண்பு,
(1) இலகுவில் இனங்காணக்கூடிய தன்மை
(2) நீண்ட காலம் நிலைத்திருக்கும் தன்மை
(3) சிறு அலகுகளாகப் பிரிபடக்கூடிய தன்மை
(4) அருமைத் தன்மை
(5) அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தன்மை

10. வெற்றுக் கட்டளைக் காசோலையொன்றை வரைந்த ஒருவர் அதன் பாதுகாப்புக்கருதி குறுக்குக் கோட்டை இடுகிறார். அவர் குறுக்குக் கோடுகளுக்கிடையில் எழுதக்கூடிய மிகப் பாதுகாப்பான சொற்பதம்,
(1) அன் கோ
(2) ........................ ரூபாவுக்கு மேற்படலாகாது
(3) கைமாற்றத்தகாதது
(4) பெறுவோன் கணக்கு மட்டும்
(5) இலங்கை வங்கி

11. நிமல் ரூ. 1000 இற்கு ஒரு மணிக்கூடு வாங்கினான். இங்கு பணம் ஆற்றிய தொழிற்பாடுகள்,
(1) பெறுமான அளவுகோல், பரிமாற்றூடகம்
(2) பெறுமான அளவுகோல், சேமிப்பு அலகு
(3) பிற்போட்ட கொடுப்பனவு, சேமிப்பு அலகு
(4) பெறுமான அளவுகோல், பிற்போட்ட கொடுப்பனவு
(5) பரிமாற்றூடகம், பிற்போட்ட கொடுப்பனவு

12. பின்வருவனவற்றுள் வெளியீடு எனக்கொள்ளப்பட முடியாதது,
(1) பொருள்கள் (2) எண்ணங்கள் (3) இடங்கள்
(4) காலம் (5) சேவை

13. பின்வருவனவற்றுள் எதனடிப்படையில் வரையறுத்த கூட்டுறவுச்சங்கமொன்றை வரையறுத்த பொதுக்கம்பனி ஒன்றிலிருந்து வேறுபடுத்த முடியும்,
(1) இலாபங்களைப் பகிர்தல் (2) வரையறுத்த பொறுப்பு
(3) தொடர்ச்சி (4) உடைமை
(5) சட்ட ஆளுமை

14. வாடிக்கையாளரை அங்கத்தவராகக் கொண்ட அமைப்பு,
(1) கூட்டுறவு (2) பொதுக்கம்பனி
(3) பங்குடமை (4) கரைகடந்த கம்பனி
(5) அரச கம்பனி

15. காப்புறுதித் தவணைக்கட்டணத்தின் பெறுமதியை நிர்ணயிப்பதில் உள்ளடக்கப்படுகின்ற அம்சங்கள்
(1) காப்புறுதிப் பத்திரத்தின் பெறுமானம் / தவணைக்காலம் / வயது / தொழில்
(2) வயது/தொழில்/குடும்ப நிலை/காலம்
(3) காப்புறுதிப் பத்திரத்தின் பெறுமானம்/வயது/அபாயத்தின் தன்மை
(4) காப்புறுதிப் பத்திரத்தின் பெறுமானம்/வயது/அபாயத்தின் தன்மை
(5) அபாயத்தின் தன்மை/வயது/குடும்ப நிலை/காப்புறுதிப் பத்திரத்தின் பெறுமானம்

16. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வெளிநாட்டு வியாபாரத்திற்குச் சிறப்பான ஆதரவை நல்கிவரும் நிறுவனம்,
(1) உலக வங்கி (2) உலக வியாபார நிறுவனம்
(3) ஆசிய அபிவிருத்தி வங்கி (4) ஒபெக்
(5) சார்க்

17. நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவோருக்கான சிறந்த வழி,
(1) இழிவுப்பண்டங்களைக் கொள்வனவு செய்வதைத் தவிர்த்தல்
(2) பண்டக்குறியுள்ள பொருள்களைக் கொள்வனவு செய்வதாகும்
(3) நுகர்வோர் நிறுவன அமைப்புகளை உருவாக்குதல்
(4) கொள்வனவுக்கான பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளல்
(5) விளம்பரத்திற்குக் கவனம் செலுத்துதல்.

18. ஓர் உற்பத்திப் பொருள் மீதான SLS குறியை குறித்து நிற்பது,
(1) உற்பத்திப் பொருளின் விலை நியாயமானது என்பதை
(2) உற்பத்திப் பொருள் காலவதியாகவில்லை என்பதை
(3) உற்பத்திப் பொருள் நுகர்வோரின் சுவைக்கு ஏற்றது என்பதை
(4) உற்பத்திப் பொருள் குறிப்பிட்ட நியமமொன்றுக்கு அமைவானது என்பதை
(5) உற்பத்திப் பொருளில் தரம் மிக உயர்ந்தது என்பதை

19. உணவுச் சட்டத்தின்படி பின்வருவனவற்றில் எவ்விடயம் ஒரு பொருளின் லேபல் இடுதலில் அவசியமற்றதெனக் கருதப்படும் தகவல்,
(1) உற்பத்தியாளர் பெயர் (2) உள்ளீடுகள்
(3) விலை (4) காலாவதியாகும் திகதி
(5) உற்பத்திச் செலவு

20. இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை கொண்டுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை,
(1) 05 (2) 03 (3) 09 (4) 18 (5) 12

21. புறக்குறிப்பிடுதலோ அல்லது குறிப்பீடுகளோ இன்றிக் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்ற கருவி,
(1) வர்த்தகப் பத்திரம் (2) வைப்புச் சான்றிதழ்
(3) திறைசேரி உண்டியல் (4) சேமிப்புச் சான்றிதழ்
(5) திறைசேரி முறிகள்

22. காசோலையொன்றுக்குப் புறக்குறிப்பிடுதல் என்பதனால் கருதப்படுவது,
(1) கட்டளையிடப்பட்ட வங்கியின் பெயரைப் பின்புறத்தில் எழுதுதல்
(2) வரைவோனது பெயரைப் பின்புறத்தில் எழுதுதல்
(3) காசோலையில் குறிப்பிடப்பட்ட பெறுநர் தனது பெயரைப் பின்புறத்தில் எழுதுதல்
(4) செலவு வைத்தல் அறிவுறுத்தல்களைக் காசோலையின் பின்புறத்தில் எழுதுதல்
(5) வங்கியின் காசாளர் தனது கையொப்பத்தைக் காசோலையின் பின்புறத்தில் எழுதுதல்

23. பின்வருவனவற்றுள் அரச உடைமையின் கீழ் வணிகத்தை நடத்துவதற்கான ஒரு காரணமாகக் கருதப்படக்கூடியது,
(1) தனியுரிமையைக் கட்டுப்படுத்தல்
(2) பொதுமக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்குதல்
(3) தனியார் துறையைக் கட்டுப்படுத்தல்
(4) தனியார் முயற்சியாண்மைக்கான ஊக்கத்தைக் குறைத்தல்
(5) தேசிய பாதுகாப்பு

24. உற்பத்தி அபிவிருத்தி நிர்மாணம் சேவை வழங்குவது என்பவற்றில் தர உறுதிப்பாட்டுக்கான சர்வதேச நியமம்,
(1) ISO 9000 (2) ISO 9002
(3) ISO 9004 (4) ISO 9003
(5) ISO 9005

25. பின்வருவனவற்றுள் எது கொழும்பு பங்குப் பரிமாற்றத்தில் ஈடுபடுத்த முடியாதது?
(1) சாதாரண பங்குகள் (2) முன்னுரிமைப் பங்குகள்
(3) தொகுதிக் கடன்கள் (4) பங்கு ஆணைப்பத்திரம்
(5) திறைசேரிப் பிணைப்பத்திரம்

26. தொடர்பாடலின் பிரதான குறிக்கோள்
(1) தகவல்களைச் சேமித்தல் (2) தகவல்களை நிரற்படுத்துதல்
(3) தகவல்களைப் பரிமாற்றுதல் (4) தகவல்களைப் பகுத்தாராய்தல்
(5) தகவல்களை வழங்குதல்

27. ஏற்றுமதியாளருக்கான ஏற்றுமதிக் கொடுப்பனவில் உத்தரவாதமளிக்கும் ஆவணம்,
(1) காப்புறுதிச் சான்றிதழ் (2) ஈடுகொடுத்தல் பத்திரம்
(3) நாணயக் கடிதம் (4) சுமைச் சீட்டு
(5) ஏற்றுமதி அனுமதிப் பத்திரம்

28. இறக்குமதியை மேற்கொள்ள விரும்பும் ஒருவர் மேற்கொள்ள வேண்டிய முதல் நடவடிக்கை,
(1) பொருத்தமான வழங்குநரை இனங்காணல்
(2) விலை விசாரணை மேற்கொள்ளல்
(3) நாணயக் கடிதம் அனுப்புதல் (4) கட்டளை பிறப்பித்தல்
(5) கொடுப்பனவு முறையை அறிவித்தல்

29. வணிக வங்கி ஒன்றின் மிகப் பிரதானமான தொழிற்பாடுகளைக் கொண்ட தொகுதி,
(1) தொலை வங்கிச் சேவை, வெளிநாட்டு வங்கிச் சேவை
(2) வைப்புகளை ஏற்றல், கடன்களை வழங்கல்
(3) தொலை வங்கிச் சேவை, பாதுகாப்புப் பெட்டக சேவை
(4) அடகுச் சேவை, பாதுகாப்புப் பெட்டக சேவை
(5) வைப்புகளை ஏற்றல், அடகுச் சேவை

**பின்வரும் வினாக்களில் உள்ள இடை வெளிகளை நிரப்புக.**

30. ஒரு காசோலையின் மேலதிக கொடுக்கல், வாங்கலை மட்டுப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் குறிப்பீடு ........................................ ஆகும்.

31. பரிமாற்றூடகமாகவும் பெறுமான அளவுகோலாகவும் தொழிற்படல் பணத்தின் ............................ தொழிற்பாடாகும்.

32. பெறுநர் காசோலையொன்றில் ஆங்கிலத்தில் புறக்குறிப்பிடும்போது ........................................ எழுத்துகளில் புறக்குறிப்பிடல் வேண்டும்.

33. ஒரு வரையறுத்த பங்குடமையில் ஒரு பங்காளரேனும் ........................... வரையறுக்கப்படாத பங்காளராக இருக்கவேண்டும்.

34. மத்திய வங்கியின் விசேட அனுமதிப்பத்திரம் பெற்று வங்கி நடவடிக்கையில் ஈடுபடக்கூடிய நிறுவனம் ................................ ஆகும்.

35. கணனித் தொழில்நுட்பத்துடன் தொடர்பாடல் தொழில்நுட்பம் இணைந்தது ............................ ஆகும்.

**பின்வரும் கூற்றுகள் சரியாயின் " ✓" எனவும் பிழையாயின் " ×" எனவும் அடையாளமிடுக.**

36. பங்குடமையின் சொத்துகளைப் பங்காளர் பயன்படுத்திக் கொள்வது அவர்களின் கடமையாகும். ( )

37. வங்கியாணை பெருமளவுக்கு வணிகத்தாளை ஒத்தது. ( )

38. ஒரு வணிகத்தின் ஏற்கனவே உள்ள கட்டமைப்பினுள் புதிய வணிக முயற்சியொன்றை விருத்தி செய்தலுக்கு வழங்கும் பெயர் தொழில் பன்முகப்படுத்தல் ஆகும். ( )

39. தவணைக் கட்டணத்தை முழுமையாகச் செலுத்திய பின்னர் பொருள் கொள்வனவாளனுக்கு உரிமையாக மாறும் முறை பிற்போட்ட கொடுப்பனவு முறையாகும். ( )

40. ஓர் உற்பத்தியாளனின் உற்பத்திப் பொருளை மாத்திரம் ஒப்பந்த அடிப்படையில் விற்பனை செய்யும் நிறுவனம் கட்டுண்ட கடையாகும். ( )




## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2006 மே

வெளியீடு 02

## மாதிரி வினாப்பத்திரம்

### வணிகக்கல்வி I

திரு. B.கஜென். B.Com. *(Hons)*.வவுனியா.

### பகுதி II

முதலாம், இரண்டாம் வினாவுக்கும் ஏனைய இரு வினாக்களுக்கும் விடையளிக்குக.

01. 1. அ. தேவைகள், விருப்பங்கள் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளையும், தொடர்புகளையும் எடுத்துக்காட்டுக?
ஆ. இலங்கை அரசு தனியார் துறை முயற்சிகளுக்கு ஊக்கமளித்து வருவதற்கான காரணங்கள் யாவை?
2. அ. பணத்தின் பரிமாற்றூடகத் தொழிற்பாடு என்றால் என்ன?
ஆ. பணமொன்றின் வருவிக்கப்பட்ட (துணை) தொழிற்பாடுகள் எவை?
3. அ. பங்குடமை உறுதிப்பத்திரம் என்றால் என்ன?
ஆ. பங்குடமை ஒன்றின் சிறப்பம்சங்கள் எவை?
4. அ. இலங்கையின் ஏற்றுமதி வியாபார வளர்ச்சிக்காக ஏற்றுமதி அபிவிருத்திச்சபையால் வழங்கப்பட்டுவரும் சேவைகள் எவை?
ஆ. திறந்த காசோலை, வெற்றுக்காசோலை என்பவற்றை வேறுபடுத்துக.
5. அ. ஒரு பண்டத்தை அல்லது சேவையைக் கொள்வனவு செய்யும்போது கவனிக்க வேண்டிய காரணிகள் நான்கைக் குறிப்பிடுக.
ஆ. போக்குவரத்து நெரிசலின் தீயவிளைவுகள் இரண்டைக் குறிப்பிடுக?
6. அ. காப்புறுதி முகவருக்கும், காப்புறுதித் தரகருக்கும் இடையிலான வேறுபாடுகளை எடுத்துக்காட்டுக.
ஆ. நிறுவனமொன்றில் தொடர்பாடலுக்கான சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

02. 1. அ. ஏற்றுமதியாளர் ஒருவர் தூய சுமைச் சீட்டைப்பெற விரும்புவது ஏன்?
ஆ. நிலையான வைப்பிற்கும், சேமிப்பு வைப்புக்கும் இடையிலான வேறுபாடுகளைக் கூறுக.
2. அ. பல நாடுகளில் சுரங்க வழிப்பாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.
ஆ. கொடுப்பனவு நிறுத்தப்பட்ட காசோலை எவ்வாறு இரத்துச்செய்யப்பட்ட காசோலையிலிருந்து வேறுபடுகிறது?
3. அ. பிரதிமைப்படுத்தப்பட்ட காசோலை என்றால் என்ன?
ஆ. பிரதிமைப்படுத்தப்பட்ட காசோலையின் அனுகூலங்கள் எவை?
4. அ. வரையறுத்த பொதுக்கம்பனிக்கும் கூட்டுறவுச் சங்கத்திற்குமிடையிலான ஒற்றுமைகள் யாவை?
ஆ. வரையறுத்த தனியார் கம்பனியின் சிறப்பம்சங்கள் எவை?
5. அ. மூலதனச்சந்தை என்பதனால் கருதப்படுவது யாது?
ஆ. இலங்கையிலுள்ள மூலதனச் சந்தையின் ஆக்க வடிவமைப்பை எடுத்துக் காட்டுக.
6. அ. வங்கிக்கடன் ஒன்றிற்கு விண்ணப்பிக்கும் ஒருவர் வங்கிக்கு வழங்கவேண்டிய தகவல்கள் எவை?
ஆ. இலங்கை அரசாங்கம் ஏன் அரசாங்கத்துக்குச் சொந்தமான சில வணிகங்களைத் தனியார் மயப்படுத்துகின்றது?

03. 1. தன்னியக்கமாக்கப்பட்ட வங்கிச்சேவை மூலம் வாடிக்கையாளருக்கு ஏற்படக் கூடிய நன்மைகள் யாவை?
2. சேமிப்புக் கணக்கிற்கும் நடைமுறைக் கணக்கிற்கும் இடையிலான வேறுபாடுகள் எவை?
3. கொடுப்பனவு நிறுத்தப்பட்ட காசோலை எவ்வாறு இரத்துச்செய்யப்பட்ட காசோலையிலிருந்து வேறுபடுகிறது?
4. காசோலை ஒன்று சாட்டுதல் செய்யப்படும்போது சாட்டுதல் செய்வோனால் கவனிக்கப்படவேண்டிய விடயங்கள் யாவை?
5. இலங்கையிலுள்ள பெரும்பாலான வியாபாரங்கள் "மோசமான தொடர்பாடல்" மூலம் பாதிக்கப்படுகின்றன. இதற்கான காரணங்கள் என்ன?

04 1. தேசியமயமாக்கல், தனியார் மயமாக்கல் ஆகிய ஒவ்வொன்றிலும் உள்ள மூன்று பிரதிகூலங்களைக் குறிப்பிடுக.
2. மத்திய வங்கி வட்டி வீதம் அதிகரிக்கப்படுவதால் வணிகத்திற்கு ஏற்படும் விளைவுகள் எவை?
3. தொலைவங்கித் தொழில் என்பது யாது?
4. நிதிக்கம்பனிகள் நிறைவேற்றவேண்டிய சட்டத்தேவைப்பாடுகள் எவை?
5. நல்ல தகவல்கள் கொண்டிருக்கவேண்டிய பண்புகள் 6 குறிப்பிடுக.

05 1. கடன் அட்டை ஒன்றில் காணப்படக்கூடிய தகவல்கள் சில குறிப்பிடுக.
2. இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை உறுப்பினர்களைக் குறிப்பிடுக.
3. ஒரு வணிகம் சமூகத்திற்கு ஆற்றவேண்டிய பணிகள் இரண்டையும், ஒரு சமூகம் வணிகத்திற்கு ஆற்றவேண்டிய பணிகள் இரண்டையும் குறிப்பிடுக.
4. அ. உலகமயமாக்கலை விரிவுபடுத்திய காரணிகள் யாவை?
ஆ. உலகமயமாக்கலின் பாதகமான விளைவுகளைக் குறிப்பிடுக.
5. ஓர் அலகு நம்பிக்கை நிதியில் ஒரு முதலீட்டாளர் முதலீடு செய்வதால் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் எவை?

06. 1. தற்போது சர்வதேச ரீதியாக மிகவும் பிரபலமடைந்துவரும் "வணிகச் செய்முறையை வெளிவளமிடல் (BPO) என்பதனால் கருதப்படுவது யாது?
2. இந்த வெளிவளமிடலின் நன்மைகள் எவை?
3. இலங்கையின் குறிப்பிட்ட சில ஏற்றுமதியாளருக்கென மிக அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் பச்சை வழி வசதி "(Green channel facility)" இனைக் குறிப்பிட்டு அதன் நன்மைகளைக் குறிப்பிடுக.
4. ஒரு சுற்றறிக்கை எவ்வாறு ஓர் அறிவித்தலிலிருந்து வேறுபடுகிறது?
5. மூலதனம், பொறுப்பு, முகாமை எனும் பதங்கள் ஒவ்வொன்றும் தொடர்பாகப் பங்குடமையொன்று வரையறுத்த பொறுப்புக் கம்பனியிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

(வணிகக்கல்வி வெளியீடு பகுதி II இன் பகுதி I இன் வினாக்களின் தொடர்ச்சி 10.04.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)

## *விடைக் குறிப்புகள்*

வெளியீடு 01

### வணிகக்கல்வி I

திரு. B.S. பசில் (B.B.A.) யாழ்.

(வணிகக்கல்வி I பகுதி II இன் விடைக்குறிப்புகள் 27.03.2006ஆம் திகதி வெளியாகியிருந்தன. அதன் தொடர்ச்சி இங்கு வெளியாகின்றன.)

(iii) 1. இலாபகரமானதாகச் செயற்படுத்தல்
2. நுகர்வோரை மையமாகக் கொண்டு சிறப்பாகத் தொழிற்படுதல்.
3. வெளிநாட்டவர்களுக்குப் பங்குகளை வழங்கி மூலதனத்தை அதிகரித்தல்.
4. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஊடாக நவீன தொழில்நுட்பங்களை வரவழைத்தல்.
5. அரச திறைசேரியின் நிதி இழப்பைக் குறைத்தல்.

(iv) 1. காசோலையில் அனைத்து அம்சங்களும் சரியாக உள்ளனவா என அவதானித்தல்.
2. காசோலையை வழங்குபவருக்கு அதன்மீது பூரண உரிமை உண்டா என அவதானித்தல.
3. குறுக்குக் கோடு எவ்வகைப்பட்டது என அவதானித்தல்
4. புறக்குறிப்பிடல் சரியாக உள்ளதா என அவதானித்தல்

4. (i). 1. தீ அபாய நட்டத்தை ஈடு செய்ய உதவுதல்.
2. களவு அபாய நட்டத்தை ஈடு செய்ய உதவுதல்
3. வன்முறை, பயங்கரவாதம் போன்றவற்றால் ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்ய உதவுதல்
4. பொருள் போக்குவரத்தின் போது எழும் நட்டத்தை ஈடுசெய்ய உதவுதல்
5. ஏற்றுமதி வியாபாரத்தில் எழும் நட்டத்தை ஈடுசெய்ய உதவும்.
6. ஊழியர்களின் நேர்மையின்மையால் எழும் நட்டத்தை ஈடுசெய்ய உதவுதல்
7. நிலநடுக்கம், சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களால் எழும் நட்டங்களை ஈடுசெய்ய உதவுதல்.
8. மோட்டார் வாகன விபத்தால் எழும் நட்டத்தை ஈடுசெய்ய உதவுதல்

(ii). அ. பொதுமக்கள் கலவரம், சண்டைகள், பயங்கரவாதச் செயல்கள், வேலை நிறுத்தம் போன்றவற்றிற்கு
ஆ. 1. விரைவான காப்புறுதிச் சேவை
2. பல்வேறு நன்மைகள் கொண்ட காப்புறுதிகள் அறிமுகம்.
3. தரமான காப்புறுதிச் சேவை.

(iii). 1. ஊழியருக்கும் தொழில் வழங்குவோருக்குமிடையே சிறந்த தொழில் உறவை ஏற்படுத்த உதவும்.
2. நிறுவனத்தின் பகுதிகளுக்கிடையே தகவல்களை வழங்கலாம்.
3. உயர் மட்டத்தினர் கீழ் பணியாளர்களுக்கு ஆலோசனை வழங்கல்.
4. கீழ்பணியாளர்களிடமிருந்து ஆலோசனை பெறலாம்.

(iv). **அ. அங்கத்துவத் தத்துவம்**
ஒரு சொத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட காப்புறுதி நிறுவனங்களில் காப்புறுதி செய்யப்பட்டிருப்பின் சொத்துக்கு நட்டம் ஏற்பட்டால் அந்நிறுவனங்கள் அனைத்தும் இணைந்து தம்மிடையே காப்புறுதி செய்த விகிதத்துக்கு அமைய ஏற்பட்ட நட்டத்தை மட்டும் பகிர்ந்து வழங்குவர். இதனை அங்கத்துவத் தத்துவம் என்பர்.
**ஆ. பரந்த வலையமைப்பு**
மிகப்பரந்த அளவிற்குத் தூர இடங்களில் உள்ள கணனிகள் பலவும் வேலைத்தளங்கள் பலவும் தேசிய தொலைபேசி வலையமைப்பு மூலம் இணைக்கப்பட்டிருந்தால் அது பரந்த வலையமைப்பாகும்.
**இ) வாக்குரிமையற்ற பங்கு**
வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்த முடியாது ஆனால் சாதாரண பங்குதாரர்களுக்கான அனைத்து உரிமைகளையும் கொண்டுள்ள பங்கு வாக்குரிமையற்ற பங்கு ஆகும்.

5. (i). 1. மிக விரைவாகத் தகவல்களைத் தயாரிக்கலாம்.
2. மிகத் திருத்தமாக தகவல்களைத் தயாரிக்கலாம்.
3. மிகவும் அவசியமான தகவல்களைத் தயாரிக்கலாம்.
4. தகவலைத் தயாரித்தல், சேர்த்து வைத்தல் என்பன சிறிய இடத்தில் நிகழும்.
5. குறைந்தளவு ஊழியர்கள் போதுமானதாக இருக்கும்.
6. நிறுவனச் சூழல் கவர்ச்சிகரமானதாக அமையும்.

(ii). 1. மனித மணித்தியாலங்கள் விரயமாகுதல்.
2. சில பொருள்கள் உரிய நேரத்தில் சந்தைக்கு அனுப்ப முடியாத பாதிப்பு
3. மக்களிற்கு அசௌகரியங்கள் அதிகரித்தல்.
4. வீதி விபத்துகள் அதிகரித்தல்.

(iii).1. எந்த நாட்டிற்கு ஏற்றுமதி செய்வது.
2. ஏற்றுமதி செய்வதற்கான பொருள் எது.
3. ஏற்றுமதிப் பொருளைப் பெறக்கூடிய வழிகள்.
4. வெளிநாட்டுக் கொள்வனவாளரைக் கண்டறியக் கூடிய வழிகள்.
5. ஏற்றுமதிக்கான நிதியைப் பெறக்கூடிய வழிகள்.

(iv). **அ. வர்த்தக நிலுவை.**
கட்புலனாகும் ஏற்றுமதிக்கும் கட்புலனாகும் இறக்குமதிக்கும் இடையிலான வித்தியாசம் வர்த்தக நிலுவையாகும்.
**ஆ. கோட்டாமுறை**
சர்வதேச வர்த்தகத்தில் இரு நாடுகளுக்கிடையில் வியாபாரம் மேற்கொள்வதற்கு உடன்படிக்கை செய்துகொண்ட அளவு முறை கோட்டா முறையாகும். ஏற்றுமதியாளருக்கு இது நிலையான சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும்.
**இ. எதிர் வர்த்தகம்.**
அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையாகவுள்ள ஒரு நாடு சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுதல் எதிர் வர்த்தகமாகும். இது பண்டமாற்று முறையில் அல்லது பெறுமதியில் ஒரு பகுதி பண வடிவிலும் மிகுதி பொருள் வடிவிலுமாக இடம் பெறும்.

6. (i). 1. தொழில்நுட்ப வளர்ச்சியால் ஏற்படும் சவால்கள்.
2. அதிகரித்த போட்டியால் ஏற்படும் சவால்கள்.
3. உலக மயமாக்கலால் ஏற்படும் சவால்கள்.
4. நுகர்வோரின் அறிவு வளர்ச்சியால் ஏற்படும் சவால்கள்.
5. அரசியல் மாற்றங்களினால் ஏற்படும் சவால்கள்.
6. சூழல் பாதுகாப்புத் தொடர்பான சட்ட திட்டங்களால் ஏற்படும் சவால்கள்

(ii). 1. நுகர்வோருக்குத் தேவையான பொருளகளைத் தேவையான அளவில் விற்றல்.
2. அதிகளவில் வாங்கி சிறியளவில் விற்றல்.
3. மீள் விற்பனைக்கேற்ற முறையில் அடுக்கி வைத்தல்.
4. விற்பனையின் பின் சேவையாற்றல்.
5. கடனுக்கு விற்றல்
6. வாடகைக் கொள்வனவு முறையில் விற்றல்.
7. நுகர்வோர் முறைப்பாடுகளை உற்பத்தியாளர்க்குத் தெரியப்படுத்தல்
8. நுகர்வோருக்குத் தகவலளித்தல்

(iii)அ. 1. தேவையான மூலதன வசதி
2. போதிய அறிவுத் திறனும் அனுபவமும்.
3. களஞ்சிய வசதி.
4. போக்குவரத்துக்கான வாகன வசதிகள்.

ஆ.

| | தரகர் | தரகு முகவர் |
|---|---|---|
| 01 | இவர் கொள்வனவாளருக்கும் விற்பனையாளருக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்தல் | இவர் முதல்வரின் பொருட்களை அவரின் சார்பில் விற்றுக் கொடுப்பர். |
| 02 | இவர் தரகுக் கட்டணத்தைப் பெறுவர். | இவர் தரகைப் பெறுவர். |

(iv). **அ. வரவுத்தாள்**
நபர் கணக்கில் அல்லது ஆட்குறி கணக்கில் வரவில் மேற்கொள்ளப்பட்ட திருத்தப்பதிவைத் தெரியப்படுத்தப் பயன்படுத்தும் ஆவணம் வரவுத்தாள் ஆகும்.
**ஆ.பருவகாலக்கழிவு**
விற்பனை குறைவான காலங்களில் விற்பனையை அதிகரிக்க மேற்கொள்ளப்படும் விலைக்குறைப்பு
**இ.தோற்றுவாய் சான்றிதழ்**
ஏற்றுமதி செய்யப்படும் பொருள் ஏற்றுமதியாளனின் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தி அந்நாட்டின் வணிகர் கழகத்தினால் வெளியிடப்படும் அறிக்கை தோற்றுவாய்ச் சான்றிதழாகும். இது இறக்குமதியாளனின் தீர்வைச் சலுகையைப் பெற உதவும்.

(வணிகக்கல்வி வெளியீடு II இன் விடைக்குறிப்புகள் 10.04.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)